Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 17 புதன்கிழமை (03.12.2014) பக்கங்கள் 20 ஓசை - 063

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# அதிக குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணம்

## கிளிநொச்சியில் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த ஆண்டுமுதல் சமுர்த்தி பயனாளிகளை மேலும் 30 வீதமாக அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நேற்று வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாவட்டத்தில் ஏற்கனவேயுள்ள சமுர்த்தி பயனாளிகளை விட மேலதிகமாக 2015 ஆம் ஆண்டு முதல் மேலும் 30 வீதமான பயனாளிகளுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

எமது அரசின் ஊடாக நாம் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். கடந்த கால அரசுகளை விட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசு சரியான தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளது.

இந்நிலையில் மக்களுக்கான தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கு உரியவகையில் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே எமது அரசியல் நிலைப்பாடாகும். கடந்தகால தவறான அரசியல் வழிநடத்தல்களால் எமது மக்கள் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். ஆனால் அந்த நிலையை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

எனவே, வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்களாகிய நீங்களும் நீங்கள் சார்ந்து வாழும் சமூகமும் பொருளாதாரத்திலும், அபிவிருத்தியிலும் மேம்படும் வகையில் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும். 19 ஆம் பக்கம் பார்க்க...



## அனர்த்த தணிப்பு திட்டத்துக்காக ஜப்பானிய அரசு மானிய உதவி

### முதற்கட்டமாக 240 மில்லியன்

(கொழும்பு)

அனர்த்த தணிப்பு நடவடிக்கைகள் உட்பட ஜப்பானிய உற்பத்திகளை கொள்முதல் செய்வதற்குமாக ஜப்பானிய அரசு இலங்கைக்கு 240 மில்லியன் ரூபாவை விசேட மானியமாக வழங்கியுள்ளது.

குறிப்பாக நாட்டின் சமூக பொருளாதார துறைகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் பொருட்டும், ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் சிறிய நடுத்தர வர்த்தக உற்பத்திப்பொருட்களை கொள்முதல் செய் 19 ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் செய்த கொலை; ஒட்டுசுட்டானில் அகழ்வு

### தடையங்கள் சேகரிக்க முயற்சி

விடுதலைப்புலிகளினால் சிறை வைக்கப்பட்டிருந்த 80 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இடம் ஒன்றை பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று அகழ்ந்திருக்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள பெரிய இத்திமடு என்ற இடத்திலேயே இந்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருக்கின் 19 ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் மீது மீண்டும் தடை


### நடக்கிறது மீளாய்வு

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலைப்புலிகள் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றியமைக்கு எதிராக இப்போது மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனால் புலிகளை மீண்டும் தடை விதிக்கப்புடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே விதித்த தடையை ஐரோப்பிய நீதிமன்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் இரத்து செய்ததை அடுத்து, அந்த முடிவுக்கு எதிராக இப்போது ஐரோப்பிய ஒன்றியம் மேல் முறையீடு செய்ய 19 ஆம் பக்கம் பார்க்க...

## நல்லை ஆதீனத்தில் யாழ்.கட்டளைத்தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாக புதிதாக பொறுப்பை ஏற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் நேற்று நல்லை ஆதீன குருமுதல்வரை, ஆதீனத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இராணுவத் 19 ஆம் பக்கம் பார்க்க...

## ஜப்பானிய போர்க்கப்பல்கள் கொழும்பில் நங்கூரம்

(கொழும்பு)

இரண்டு ஜப்பானிய கடற்படைக்கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

ஹருசேம் டிடி 102 மற்றும் அமாகிரி டிடி 154 என்ற கப்பல்களே கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளன.

இந்த இரண்டு கப்பல்களும் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

காலியில் நடைபெற்ற சர்வதேச 19 ஆம் பக்கம் பார்க்க...

## உறவுகளை வலுப்படுத்த மந்திராலோசனை




(கொழும்பு)

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்டோவல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இந்த சந்திப்பின்போது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இருவரும் மந்திராலோசனையில் ஈடுபட்டனர்.

இலங்கையுடனான உறவுகள் குறித்து இந்தியா திருப்தியடைந்துள்ளது என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள் 19 ஆம் பக்கம் பார்க்க...



## வேலணையில் ஒளி விழா

(வேலணை)

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி பு. இராசநாயகம் தலைமையில் இடம்பெறும். (21)

# நாற்பது வணிகர்கள் மீது தண்டம்; 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா அறவீடு

### பாவனையாளர் அதிகார சபை அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 40 வியாபார நிலைய உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாக யாழ். செயலக பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி த. வசந்தசேகரன் தெரிவித்தார்.

47 பேர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு 46 பேர் மீது பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 40 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கொடிகாமம், இணுவில், சுன்னாகம், வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, மல்லாகம், பருத்தித்துறை போன்ற இடங்களிலுள்ள பேக்காரி உரிமையாளர்கள் நிறை குறைவான பாண் உற்பத்தி மேற்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டதாகவும் அதிலும் வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, பருத்தித்துறை பகுதிகளில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 3 பேக்கரி உரிமையாளர்களுக்கும் இவ்வாறு மீண்டும் செயற்பட்டால் பேக்கரி சீல் செய்யப்படும் எனவும் சிறைவாசம் அனுபவிக்க நேரிடும் என நீதிமன்றத்தால் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் தண்டமும் அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

## சுகாதார சீர்கேட்டுடன் கழிவு வாய்க்கால்

(சுன்னாகம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகில் கீரிமலை பிரதான வீதியில் அமைந்துள்ள நீர் வழிந்தோடும் வாய்க்கால் மண், குப்பைகளால் நிறைந்து சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்து வரும் கனமழையினால் வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ள நீர் வடிகால் வாயை சென்றடைய முடியாது தாழ்வான பகுதிகளை நோக்கிச் செல்வதால் குறிப்பாக, குடியிருப்புகளுள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, மழைக்கு முன்னரான காலப்பகுதியிலும் இக்கழிவு வாய்க்கால் இவ்வாறான நிலையிலேயே காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இக்கழிவு வாய்க்காலை சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (66)

## யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் மாற்றுவலுவுடையோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு இன்று முற்பகல் 8.30 மணிக்கு நிறுவனத்தில் நடைபெறுவுள்ளது.

ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் டாக்டர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன், சிறப்பு விருந்தினராக சிறுவன பயனாளியும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான செ. சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் தலைமையில் மாற்றுத் திறனாளிகள் பங்குபெறும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வு வளம் பெற்றுள்ளது/ வளம் பெறவில்லை என்னும் தலைபபில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8.30 மணிக்கு இரத்ததான நிகழ்வு, கலை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

## சிற்றுண்டிச்சாலை திறப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள், ஆசிரியர்களின் நன்மை கருதி சுமார் 90 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன சிற்றுண்டிச்சாலை இன்று காலை 8.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இத்திறப்பு விழாவில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நவீன சிற்றுண்டிச்சாலையை திறந்து வைப்பார். (01)

## யாழ். முதலீட்டாளர்களுக்கு பயனுள்ள விரிவுரைகள் இன்று

### பணிப்பாளர் கெங்காதரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தொழில் முயற்சியாளருக்கான முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட உள்ளூர் வளங்களின் கிடைப்பனவுகளும், அவற்றின் மீதான எதிர்கால முதலீட்டு வாய்ப்புக்களும், தொழில் முயற்சிக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களும் அவற்றிற்கான நடைமுறைகளும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்கான வரி நடைமுறைகள், சிறிய நடுத்தர கைத்தொழில் கொள்கைகளும் மற்றும் சிறிய நடுத்தர கைத்தொழில் அபிவிருத்திக்கான வங்கி உதவிச் சேவைகளும் எனும் தலைப்புக்களில் துறைசார் தேர்ச்சி பெற்ற வளவாளர்களினால் விரிவுரையாற்றப்படும் என்பதனையும் தொழில் முயற்சியை மேம்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் பங்குகொள்ள முடியும் என்பதை பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்.

## மகளிர் கல்லூரியில் கலை நிகழ்வுகள

(உடுவில்)

உடுவில் மகளிர் கல்லூரியில் நேற்று வெகு கோலாகலமாக ஆரம்ப பிரிவு மாணவர்களின் ஆங்கில இசை-நாடாக நிகழ்வு இடம்பெற்றது. கல்லூரி முதல்வர் திருமதி சிராணி மில்ஸ் நிகழ்வின் ஆசியுரையினை வழங்கினார்.

ஜுபில மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் 16 நிகழ்வுகள் ஆங்கிலத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டதாக ஆரம்ப பிரிவு மேற்பார்வையாளர் தெரிவித்தார்.

## நவாலி சென். பீற்றர்ஸ் பாடசாலை ஒளி விழாவும் கௌரவிப்பும்

### அதிபர் நந்தகோபன் தலைமையில் இன்று

(நவாலி)

நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலை ஒளிவிழாவும் புலமைப் பரிசில் மாணவர் கௌரவிப்பும் இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை முதல்வர் க. ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நிகழ்வு இடம்பெறம்.

பிரதம அதிதியாக பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி ஜசிந்தா அன்ரன் கலந்து சிறப்பிப்பார்.

ஆசியுரையினை நவாலி சென். பீற்றர்ஸ் அருட்தந்தை எம்.டி. பவுல் சுரேஷ் வழங்குவார்.

வாழ்த்துரைகளை மானிப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் பி. விசாகன், லயன். சி. நாகையா (ச.நீ), கலாபூசணம் நவாலியூர் நடேசன், ஓய்வுநிலை மருந்தாளர் சி. விக்னேஸ்வரன், ஊன்றுகோல் அறப்பணியக இயக்குநர் க. நாகலிங்கம், வளர்மதி ச.ச. நிலைய ஆலோசகர் ச.க. தேவ தாசன், நவாலி கிறிஸ்தவ ஒன்றிய செயலாளர் ஏ. ஜேசு ரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1114

திகதி 01.12.2014

வெற்றி எண்கள்: 15 19 25 63 — ஆங்கில எழுத்து: U

ஜக்பொட் பரிசு ரூ. 4,60,15,320/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,60,15,320/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 276 | 1,000/= | ரூ. 2,76,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 526 | 1,000/= | ரூ. 5,26,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12404 | 60/= | ரூ. 7,44,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6528 | 40/= | ரூ. 2,61,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 162666 | 20/= | ரூ. 32,53,320/= |
| ஆங்கில எழுத்து | 23518 | 20/= | ரூ. 4,70,360/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 81,31,040/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 46,333,700/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.12.04 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

C/3916



## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680, 077 592 5088.

(C/3589)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் ஒரு புதிய கல் வீடும், சகல வசதிகள் கொண்ட இன்னொரு வீடும் காணியுடன் விற்பனைக்குண்டு. பென்சன் பெறுவோர், அரச வைத்தியசாலைகளில் பணிபுரிவோர்க்கு சகாய விலைக்கு கொடுக்கப்படும். தரகர் வேண்டாம். தொடர்பு:- க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/379)


## கலாசாரப் பெருவிழா வேலணையில் நாளை

வேலணை பிரதேச கலாசாரப் பேரவையும், வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் கலாசாரப் பெருவிழா - நாளை மாலை 2 மணிக்கு வேலணை பிரதேச செயலக விழா மண்டபத்தில் வேலணை பிரதேச செயலர், திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகயம், சிறப்பு விருந்தினராக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும் வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.


கௌரவ விருந்தினர்களாக, வேலணை பிரதேச சபைத்தவிசாளர் சின்னையா சிவராசா, தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் திருஞானம் குயின்ரன்ஸ், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி குணாளினி விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

கலைநிகழ்ச்சிகளாக, புங்குடுதீவு திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்றத்தினரின் கீதம் இசைத்தலும், புங்குடுதீவு ஆனந்தன் புதல்வர்க்ளின் மங்கல இசையும், வேலணை நடனப் பயிற்சி மாணவர்களின் புஸ்பாஞ்[illegible] துறையூர் ஐயனார் கலாமன்றத்தினரி[illegible]வேற்பு நடனமும், வேலணை சிவகலை ந[illegible]மன்றத்தினரின் தனிநடனமும், நூல்[illegible]டும், வேலணை நடனப்பயிற்சி நிலைய மாணவர்களின் கிராமிய நடனமும், துறையூர் ஐயனார் கலா மன்றத்தினரின் குவேனி கூத்தும், பரிசளிப்பு நிகழ்வும், வேலணை நாட்டிய பயிற்சி மாணவர்களின் அபிநயப் பாடலும், கலைஞர்கள கௌரவிப்பும், நேதாஜி கலைமன்றத்தின் அரிச்சந்திர மயான காண்டமும் நடைபெறவுள்ளன.

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
தீர்மானம் எடுத்தலில் பெண்களையும் அங்கீகரிப்போம்.
சமத்துவம் காப்போம்.
16
2014

# முல்லை பொதுநூலக வீதியை தார்ப்பாதையாக அமைக்க ஏற்பாடு

## கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் தெரிவிப்பு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட, முல்லைத்தீவு பொது நூலகத்துக்கு செல்லும் உள்வீதி, தார்ப்பாதையாக புனரமைக்கப்படவுள்ளதாக கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சு.ரவீந்திரநாதன் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

எமது சபையின் பொதுநூலகம், முஸ்லிம் பாடசாலை, பதிவாளர் அலுவலகம் என்பன இவ்வீதியிலேயே அமைந்துள்ளன. மிக நீண்டகாலமாக குறித்த வீதியானது குண்டும் குழியுமாக காட்சியளித்து வருகின்றது.

எனவே, மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வீதியூடாகவே பயணத்தை மேற்கொள்கின்றனர். ஆகவேதான், மக்களின் சிரமங்களை கவனத்தில் கொண்ட எமது சபை இவ்வீதியை புனரமைக்க சுமார் 3 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் வீதிப்புனரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும், வேலணை பிரதேச செயலர் பிரிவிலும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி பதினைந்து பெண்களுக்கு வாழ்வாதார நிதி உதவி வழங்கலும் மற்றும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பதினைந்து இளம் பெண்களுக்கு தாதிய பயிற்சிக்கான நிதி வழங்கலும் யாழ்.வணிகர் கழக பணிமனையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# கோணாவில் - ஸ்கந்தபுரம் வீதியில் போக்குவரத்து செய்யமுடியாத அவலம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில் தொடக்கம் ஸ்கந்தபுரம் வரையிலான பிரதான வீதி இன்னமும் புனரமைக்கப்படாமையினால் இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்படும் அபாய நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்ற இப்பகுதி மக்கள் இவ்வீதியை உடனடியாக செப்பனிடவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதி மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையினால் பாரிய குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. அம்பலப்பெருமாள் சந்தியில் இருந்து அக்கராயன் மகா வித்தியாலயம் வரையான 500 கிலோ மீற்றர் வீதியும் கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து புதுமுறிப்பு வரைக்குமான சுமார் 3 கிலோ மீற்றர் வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட சுமார் 09 கிலோமீற்றர் நீளமான கோணாவில் ஸ்கந்தபுரம் வீதிமிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமலுள்ளது.

இதனால் இவ்வீதியில் பாரிய குண்டுகளும் குழிகளும் காணப்படுகின்றன. தற்பொழுது இங்கு மழை பெய்து வருவதால் இவ்வீதியூடான போக்குவரத்து தடைப்படும் அபாய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்ற இப்பகுதி மக்கள் இவ்வீதியை உடனடியாக செப்பனிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர் - 06

## (பகுதி - 4)




**படைப்பாளிகளே ஒரு சமூகத்தின் இதயம். அவர்களே காலத்தின் கண்ணாடி. அவர்களே வரலாற்றின் மனச்சாட்சி. அவர்களே அறத்தின் நிர்மாணிகள். அப்படியான படைப்பாளிகள் தமிழ் பேசும் மக்களுடைய எதிர்காலத்தைக் குறித்தும் இலங்கைத்தீவின் எதிர்காலம் பற்றியும் என்னமாதிரியான அக்கறைகளோடு இருக்கிறார்கள் என்று அறிய வேண்டும் என்று வரலாறு விரும்புகிறது.**

**ஆகவே படைப்பாளிகள், விமர்சகர்களிடம் சில கேள்விகள் ?**

1. படைப்பாளிகளின் உயிர்நாடி என்பது சத்தியம். அந்தச் சத்தியத்தை எத்தனைபேர் முறையாகக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படிச் சத்தியத்தை உயிர் வேட்கையாகக் கொண்டிருந்தால் இன்று ஈழத்தமிழிலக்கியம் உலகத்தின் பெரும்பரப்பைச் சென்றடைந்திருக்கும். ஒருவகையில் இலங்கையின் இனப்பிரச்சினையை அது சர்வதேசப் பரப்பில் சரியான முறையில் அறிமுகப்படுத்தியிருக்கும் என்று சொல்லப்படும் விமர்சனம் பற்றி படைப்பாளிகளின் அபிப்பிராயம் என்ன?

2. அப்படிச் சத்தியத்தையே உங்கள் படைப்பின் உயிர்நாடியாகவும் வாழ்வின் உயிர்நாடியாகவும் கொண்டிருந்தால் தமிழ் பேசும் மக்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக – இந்தப் பிரச்சினையோடு தொடர்பு பட்ட சக்திகளான அரசியல் கட்சிகளோடும் அரசியல் தலைவர்களோடும் எந்த வகையில் எல்லாம் தொடர்பு கொண்டு உங்கள் கருத்துகளை முன்வைத்திருக்கிறீர்கள்?

3. அப்படி நீங்கள் சம்மந்தப்பட்டவர்களோடு பேசியிருந்தால் அதற்கு அவர்கள் அளித்த பதில் என்ன? அப்படி நீங்கள் அவர்களோடு பேசவில்லை. தொடர்பு கொள்ளவில்லை என்றால், அதற்கான காரணம் என்ன?

4. மாற்றுச் சிந்தனையுடைய படைப்பாளிகளைத் துரோகிகளாகவும் போராட்டத்துக்கும் விடுதலைக்கும் எதிராகவும் சித்தரிக்கும் அரசியலுக்குப் பின்னே படைப்பாளிகள் முண்டுதடியாக நிற்கலாமா?

5. மெய்யாகவே ஒரு படைப்பாளி ஒடுக்குமுறைக்குள்ளாகிய சமூகத்திற்காகத் தன்னுடைய குரலை உயர்த்தியிருந்தால், தன்னுடைய படைப்புகளை உயிர்நாடியாக வைத்துச் செயற்பட்டிருந்தால், அல்லது அப்படிப் போராடியிருந்தால் இன்று அந்தப் படைப்பாளி உலகம் முழுவதும் அறியப்பட்ட படைப்பாளியாகவே இருந்திருப்பார். அவருடைய படைப்புகளும் உலகப் புகழ்வாய்ந்தவையாக, விடுதலைக்கான உயர் அழுத்தத்தை உண்டாக்கியிருக்கும். பலஸ்தீனக்கவிதைகளைப்போலவோ, லத்தீன் அமெரிக்க இலக்கியங்களைப்போலவோ, பாரதியார் கவிதைகளைப்போல ஈழத்தமிழர்களின் படைப்புகள் வந்திருக்கின்றனவா?

6. இவ்வளவு பெரிய போராட்டமும் போரும் நடந்த சூழலில், இத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் பலியான ஒரு காலகட்டத்தில் படைப்பாளிகளின் எதிர்வினையும் போராட்டமும் எப்படியிருந்திருக்கிறது?

7. ஜனநாயகத்துக்கும் நீதிக்கும் உண்மையாகவே எத்தனை படைப்பாளிகள் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்? அப்படிச் செயற்படும் படைப்பாளிகளைத் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானவர்கள் என்று சொல்லுகின்ற ஒரு போக்கு காணப்படுகிறதே. இதைப்பற்றிய படைப்பாளிகளின் பதில் என்ன?

8. தமிழ்த்தேசியம் என்பது ஜனநாயகமும் பலதரப்பின் கருத்துகளுக்கும் இடமளிக்காத ஒரு கருத்தியலாக உள்ளதே. இதைப்பற்றிய படைப்பாளிகளின் பார்வை என்ன? இதை விமர்சிக்கிற படைப்பாளிகள் எதிராளிகளா?

9. சத்தியத்தை உயிர்நாடியாகக் கொண்ட படைப்புகள் இருந்திருக்குமானால் அவை. தமிழ் சிங்கள உறவைப் புதிய பரிமாணத்தில் உருவாக்குவதற்கு உதவியிருக்கும். ஆனால், நடந்திருப்பதோ வேறாக உள்ளது. இப்பொழுது பெரும்பாலான தமிழ்ப்படைப்புகளை சிங்களத்தில் மொழிபெயர்க்க முடியாத நிலை உள்ளது. அதைப்போல சிங்களப் படைப்புகளை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க முடியாமல் இருக்கிறது என்று மொழிபெயர்ப்பாளர்கள் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு இரண்டு மொழிப்படைப்பாளிகளும் இனவாதநிலைப்பட்டு தங்கள் படைப்புகளை ஆக்கியிருக்கிறார்கள். இது அமைதிக்கு எதிரான ஒரு போக்கு என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுப்பற்றி படைப்பாளிகளின் பதில் என்ன?

10. தமிழ் – முஸ்லிம் சமூகங்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்கு படைப்பாளிகள் ஆற்றிய பங்கு என்ன? அதன் விளைவுகள் என்ன?

11. சிங்களச் சமூகத்திற்கும் பிற உலக மக்களுக்கும் இனப்பிரச்சினையின் தாற்பரியத்தை உரிய முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்களா? அப்படியானால் அதனால் உண்டான மாற்றங்கள் எவை?

12. தமிழ் சிங்கள சமூகங்களுக்கிடையில் படைப்புகளின் வழியாகவும் படைப்பாளிகள், கலைஞர்கள் என்ற வகையிலும் போருக்குப் பிந்திய சூழலில் நீங்கள் ஏற்படுத்திய ஊடாட்டங்கள் என்ன?

13. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சமூக ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் பால் ரீதியான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் இதுவரையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் படைப்பாளிகளின் கூட்டு ஒன்றாவது உருவாகாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

14. அல்லது அப்படியான முயற்சிகள் ஏதும் என்றுமே தேவையில்லையா?

15. திறந்த மனப்பாங்குடன் படைப்பாளிகள் தங்களுக்கு முன்னே இருக்கின்ற அனைத்துச் சவால்களைப்பற்றியும் பகிரங்கத்தளத்தில் உரையாடுகிறார்களா?

16. எல்லாப்படைப்பாளிகளும் பங்கேற்கக் கூடிய ஒரு இதழையோ இணையத்தளத்தையோ உண்டாக்கவே முடியாதா?

17. பல மூத்த படைப்பாளிகள் எதற்காக ஒதுங்கிப்போயிருக்கிறார்கள். இளைய படைப்பாளிகள் எதற்காக முதிராதவர்களாகவே செயற்படுகிறார்கள்?

18. முழுமையான விமர்சனத்துக்கு தங்களையும் தங்கள் படைப்புகளையும் தங்கள் நிலைப்பாடுகளையும் படைப்பாளிகள் முன்வைப்பது எப்பொழுது?

தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள் அனைத்தையும் துணிச்சல்தான் சாதிக்கும். - டாக்டர் ஜோன்சன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழ்த் தலைமை எதற்கு இருக்கிறது?

தமிழ் அரசியல்வாதிகளைத் தவிர, தமிழ் சமூகத்திற்குள் சுயமாகச் சிந்தித்து அந்த சிந்தனைகளை வெளிப்படுத்துபவர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

இந்த நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் தமிழர்களின் ஏக தலைமையாகவும் ஜனநாயகவழித் தலைவர்களாகவும் தம்மைச் சொல்லிக்கொள்ளும் தமிழ்த் தலைவர்கள், நாட்டின் தேர்தலுக்கும் நமக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதுபோல கூசாமல் சொல்லிவிட்டுப் பம்முகிறார்கள்.

சமூகத்தில் யாரிடமிருந்தும் எந்தக் கேள்வியையும் காணோம்.

இந்நாட்டில் தலைவர்களாக வந்த, வருகின்ற, வரப்போகின்ற எவருமே சரியில்லை; அவர்களெல்லாம் தமிழ்த் தலைவர்களைக் கிட்ட வரவேண்டாம் என்றுவிட்டுத் தங்கள் அலுவல்களைக் கவனிக்கிறார்கள் என்றால்... தமிழ்மக்களின் பெரும்பான்மை வாக்குகளைக் கவர்ந்து வைத்திருக்கும் நீங்கள் எதற்குத்தான் இருக்கிறீர்கள் என்று இந்தத் தலைவர்களை யாராவது கேட்க வேண்டுமல்லவா?

“அப்போதெல்லாம் ஆயுத பலம் இருந்தது; தெற்குத் தலைவர்கள் தமிழர்களுடன் பேசினார்கள். இன்றோ அதே சந்திரிகாவும் ரணிலும் கூட இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி வாய்திறக்கப் பயப்படுகிறார்கள்...” என்று வெட்கமின்றிக் கூறுகிறது தமிழரசுக் கட்சிப் பத்திரிகை.

“தமிழர்களின் பலம் ஆயுதங்கள் மட்டுமே” என்று மீண்டும் பழையபடியான அழிவுக்காட்சியின் துவக்கத்திற்கான அடிமானத்தைப் போடுகிறது, அந்தக் காலத்திலிருந்தே அகிம்சாவாதிகளாக இருந்துவருவதாக சொல்லிக் கொள்பவர்களின் கட்சிப் பத்திரிகை.

இதுகுறித்தும், தமிழ்ச் சிந்தனைத் தலைகளாக காட்டிக் கொள்ளும் – தமிழ் மக்களுக்காக சிந்தித்து வரும் – தமிழபிப்பிராய உருவாக்குநர்களிடம் இருந்து எந்த எதிர்ப்புமில்லை.

“இந்த நாட்டில் அரசின் தலைவராக வரக்கூடிய எவரிடமும் சென்று பேச முடியாது; அவர்கள் எவரிடமும் எமக்குத் தர ஒன்றுமில்லை” என்ற கையறுநிலைப் புலம்பலையே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பவர்கள்தான், தமிழ் மக்களுக்குத் தலைமையாகவும் காட்டப்படுவதை அனுமதிக்கும் தமிழ்ச் சிந்தனாசக்திகள் இப்போது என்ன சொல்கிறார்கள்?

மூன்றாவது உலகப்போர் மூளும் வரை தமிழர்கள் எல்லோரும் அவுஸ்ரேலியப் படகுகளில் ஏறியோ அல்லது வேறு தீவுகளைப் பார்த்தோ வெளியேறிச் சென்றுவிட வேண்டியதுதானா?

சந்திரிகாவும் சரியில்லை, ரணிலும் சரியில்லை, சஜித்தும் சரியில்லை, பொன்சேகாவும் சரியில்லை, மகிந்தவும் சரியில்லை, மைத்திரியும் சரியில்லை என்று காலத்துக்குக் காலம் கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் ‘தமிழ்த் தலைமை’ தேர்தலுக்குத் தேர்தல் தெரிவுசெய்து விடப்படுகிறதா?

மைத்திரிபால சிறிசேனவிடம் இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் இல்லையென்றால், மகிந்தவால் அதிகபட்சம் என்ன தர முடியும் என்று கேட்க வேண்டாமா? தீர்வுக்கு இணக்கமாக உள்ள சிங்களத் தலைவர்களையும் முஸ்லிம் தலைவர்களையும் மலையகத் தலைவர்களையும் சேர்த்துக்கொண்டு, இந்த நாட்டில் தலைமைப் பதவிக்கு வரவிரும்புபவர் அதிகபட்சமாகத் தரக்கூடியது என்னவோ அதுதானே நடைமுறைச் சாத்தியமான தீர்வு!

அதிலிருந்துதானே நமது கெட்டித்தனத்தாலும் அனுகுமுறைகளாலும் படிப்படியாக அதிகாரங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும்!

அதைவிடுத்து, ஒபாமாவோ மோடியோ நவநீதம்பிள்ளை அம்மாவோ இதற்கு மேலதிகமான ஒரு தீர்வை எடுத்துத் தந்துவிடுவார்கள் என்று இந்தத் தமிழரசுத் தலைவர்கள் மறைமுகமாகத் தரும் “கயிறை” நம்பிக் காத்திருக்கச் சொல்வதுதானா தமிழ்ச் சிந்தனாசக்திகளின் வழிகாட்டல்?

- ஆசிரியர்

# இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது

## மைத்திரிபால தெரிவிப்பு

எந்தவொரு தரப்புடனும் இரகசியமாக உடன்படிக்கை கைச்சாத்திடப் போவதில்லை என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் தாம் எந்தவொரு அரசியல் கட்சியுடனோ அல்லது வேறும் தரப்பினருடனோ இரகசியமான உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது உடன்படிக்கைகள் வெளிப்படையானவை எனவும் யாரும் அவற்றை பார்வையிட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பாதுகாப்பு படையினரை கௌரவமான முறையில் நடத்த உள்ளதாகத்தெரிவித்துள்ளார.

பாதுகாப்பு படையினர் நாட்டின பாதுகாப்பு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த உள்ளதாகவும், சமையற்காரர்களாகவும், வெயிட்டர்களாகவும், உதவியாளர்களாகவும் பயன்படுத்தப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் வேலைவாய்ப்புகள் வருடாந்த மாநாடு கொழும்பில்

இலங்கையில் வேலைவாய்ப்புக்கள் (WISL), என்ற வருடாந்த மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள இவ் வருடாந்த மாநாடு “புதிய சகாப்தம், புதிய வாய்ப்புகள்” என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெறவுள்ளது. உயர்மட்ட பெருநிறுவன நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன உயர்மட்ட பேச்சாளர்கள் கலந்து கொண்டு தமது ஆலோசனைகள் அறிவுரைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வியறிவு படைத்த இளைஞர்கள், யுவதிகள், தமது கல்வியறிவுக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்கள் இலங்கையில் கிடைக்காமையினால் கடல் கடந்து வேறுபிரதேசங்களுக்கு செல்வதனை வழமையாகக் கொண்டுள்ளனர்.

ஆனால் தற்போது இந்நிலை சிறிது சிறிதாக மாற்றமடைந்து இதனை இன்னும் மாற்றவேண்டும். முப்பது வருடகால யுத்தத்திற்கு பிற்பட்ட காலத்திலேயே இவ்வாறு வளர்ச்சியடைந்து வருகிறது எனவும், இலங்கை தொழிலாளர்களுக்கு தமது நாட்டிலேயே வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க இவ்வாறான வருடாந்த மாநாடு மேலும் வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# சீன அபிவிருத்தி திட்ட மோசடி விரைவில் அம்பலப்படுத்துவேன்

## என்கிறார் நவீன்

சீன அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மோசடிகள் குறித்து அம்பலப்படுத்த உள்ளதாக முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கம் சீனாவுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் இதில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பாரியளவிலான மோசடிகள் பற்றிய விபரங்களை வெளியிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நம்ப முடியாத அளவிற்கு மோசடிகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளில் ஈடுபடாத ஓர் தலைவரையே நாடு எதிர் பார்க்கின்றது எனவும், அதற்கு மைத்திரிபால சிறிசேன பொருத்தமானவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிரந்தர நியமனம் கோரி போராட்டம்

## மாநகரசபை முன்றலில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை சுகாதார தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மாநகர சபை முன்றலில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்று இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் போது தாம் நீண்ட காலமாக தொண்டர்களாக பணியாற்றி வருகின்றனர் என்றும், எனவே எமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தனர்.

பதாகைகளைத் தாங்கியவாறு பல இளைஞர்கள் இந்த போராட்டத்தில் இணைந் திருந்தமையைக் அவதானிக்க முடிந்தது.

# போலி நாணயத்தாளுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

வவுனியாவில் உள்ள அரச வங்கி ஒன்றில் 5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வைப்பிலிடச் சென்ற சமயம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் வவுனியா நகரில் உள்ள அரச வங்கி ஒன்றில் பணத்தை வைப்பிலிடச் சென்ற ஒருவரது பணத்தில் 5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் இருந்தமை வங்கி உத்தியோகத்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து வங்கி நிர்வாகம் இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் மன்னார், விடத்தல் தீவுப் பகுதியில் கடமையாற்றும் பொலிஸார் என்பது தெரிய வந்தது.

# புதிய ஈழத்திட்ட நடைமுறை மூலம் ஜனாதிபதியை பதவி விலக்க சதி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்ட புதிய ஈழத்திட்ட நடைமுறை மூலம் ஜனாதிபதியை பதவியில் இருந்து விலக்க பயன்படுத்தப்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் செயலாளர் வசந்த பண்டார கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் சில யோசனைகள தொடர்பில் நடப்பு ஜனாதிபதி அவதானம் செலுத்தாமல் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினார்.

இதன் காரணமாக அவர் பல சிக்கல்களுக்குள் உள்ளாகியுள்ளதாக வசந்த பண்டார குறிப்பிட்டார்.

# ஸ்கொட்லாந்து பிரிவினை வாக்கெடுப்பும் உலக அளவில் அதன் எதிரொலிகளும்

**இன்று உருவாகியுள்ள தனி நாட்டுக் கோரிக்கைகள் சென்ற நூற்றாண்டின் தேசிய இனப் போராட்டங்களைப் போலன்றி இன வெறுப்பு இனப் பகை என்கிற அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவையல்ல. பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துப் பிரசாரம் மேற்கொண்ட ஸ்கொட்லாந்தியர்களின் முயற்சிகள் “ஸ்கொட்லாந்து தேசியவாதம்” என அடையாளப்படுத்திவிட இயலாத அளவிற்கு ஒரு தீவிரமான சமூக ஜனநாயகத் திட்டத்தை முன்நிறுத்திய இயக்கமாகவே இருந்தது. ஆங்கில இனத்தின் ஆதிக்கம் என்பதாக அல்லாமல் தனியார் சொத்துக்களில் பாதிக்கு மேல் குவித்துக் கொண்டுள்ள 432 குடும்பங்களின் ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டித் தங்கள் தனி நாட்டுக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.**

## அ.மார்க்ஸ் கட்டுரையிலிருந்து



**இன்று** ஐரோப்பாவிற்குள் தனி நாடு கோரும் பல தேசிய அடையாளங்கள் மற்றும் பிராந்தியங்கள் குறித்து நாம் அறிவோம். அவற்றில் சில அளவில் மிகச் சிறியவை. ஸ்கொட்லாந்தே கூட வெறும் 5 மில்லியன் மக்கள் தொகை கொண்டதுதான்.

பிரிவினை கோரும் பகுதிகளில் பல 17ஆம் நூற்றாண்டு இறுதி மற்றும் 18ஆம் நூற்றாண்டில் தாங்களே விரும்பி அருகிலுள்ள பெரிய நாடுகளுடன் தம்மை இணைத்துக் கொண்டவை.. 1706இல்தான் இங்கிலாந்துடன் ஸ்கொட்லாந்து இணையும் சட்டம் இயற்றப்பட்டு 1707 மே முதல் தேதியில் “கிரேட் பிரிட்டன்“ பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது.

தோன்றும்போதே முதலாளியம் ஒருவகை உலகளாவிய தன்மையுடன்தான் தோன்றியது என்பார் பேராசான் கார்ல் மார்க்ஸ். அரசெல்லைகள், புவியியல் வரம்புகள் எல்லாவற்றையும் தாண்டி மூலப் பொருட்களைத் தேடுவது, உற்பத்தி செய்த பொருட்களை விற்பது என்கிற நிலையில் சிறிய சமூகங்களும் அரசுகளும் தம்மைத் தக்கவைத்துக் கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. பெரிய அரசுகளிடம் தம்மை ஒப்புவித்துப் பாதுகாப்பு பெறும் நிலை உருவானது.

இப்படித்தான் பிரிட்டனியும் கோர்சிகாவும் ப்ரான்சுடனும், ஸ்கொட்லாந்து பிரிட்டிஷ் பேரரசுடனும் தன்னை இணைத்துக் கொள்ள நேரிட்டது. இத்தகைய இணைவுகள் பேரரசுகளின் ஏகாதிபத்திய நடவடிக்கைகட்குத் துணையாகவும் அமைந்தன.

இன்று நிலைமை தலைகீழாகி விட்டது. இன்று உலகமயச் செயற்பாடுகள், ஐரோப்பிய யூனியன் முதலான பேரமைப்புகள், “நேட்டோ“ போன்ற இராணுவக் கூட்டமைப்புகள் என உலகம் பெரிய அளவில் மாறிவிட்டது.

இந்தச் சூழலில் சிறிய நாடுகளும் கூட தேசங்களுக்குரிய எவ்விதப் பெரிய சுமைகளும் இன்றி தனித்தியங்கும் சூழல் உருவாகியுள்ளது, குறிப்பாக ஐரோப்பாவிற்குள் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியை ஒட்டி செக்கோஸ்லாவியா, யுகோஸ்லாவியா, சோவியத் யூனியன் ஆகியனவும் சைப்ரஸ், செர்பியா, சூடான் முதலியனவும் உடைந்து பல சிறு நாடுகள் உருவாயின. இதற்கும் இன்று ஐரோப்பாவில் உருவாகியுள்ள பிரிவினைக் கோரிக்கைகளுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளதாயினும் அவ்வாறு உருவான பல சிறு நாடுகள் இன்று நேட்டோவில் தஞ்சமடைந்து தம் ”பாதுகாப்பை” உறுதி செய்து கொண்டுள்ளதும் கவனத்துக்குரியது.

பெரிய இராணுவம் தேவையில்லை. தனிக் கரன்சி தேவையில்லை. வணிகத் தடைகள் நீக்கப்பட்டு நெறிமுறைகளும் ஒப்பந்தங்களும் உருவாக்கப்பட்டுவிட்டன. தனி விமானப் போக்குவரத்து, தபால் துறை என்பதெல்லாம் காலம் கடந்தவையாகிவிட்டன. எனில் ஏன் இனி பிரிட்டனியும் ஸ்கொட்லாந்தும் ஃப்ரான்சுடனும் பிரிட்டனுடனும் இணைந்திருக்க வேண்டும்? இந்தக் கேள்வி இன்று ஐரோப்பிய யூனியனுக்குள் தலை எடுத்துள்ளது.

பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் இருப்பதாகவும், தங்கள் பகுதிக்கு உரிய நியாயம் கிடைக்கவில்லை எனவும் கருதும் பகுதியினர் இந்தப் பெரிய தேசிய அரசுகளிலிருந்து பிரிந்து சுயமாகத் தம் விதியை நிர்ணயித்துக் கொள்வது என முடிவு செய்கின்றனர். மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில்தான் இன்று ஸ்கொட்லாந்தியர் மத்தியில் தனிநாடு கோரிக்கை எழுந்துள்ளது.

கோர்டன் பிரவுன் மற்றும் டேவிட் கமரோனின் ஆட்சிகள் தாட்சரின் பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றி வருவது ஸ்கொட்கள் மத்தியில் மட்டுமின்றி வேல்ஸ் மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட பிற பகுதியினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எல்லாப் பலன்களும் லண்டன் என்கிற நகர அரசை மையப்படுத்தியே உருவாகின்றன என்கிற கருத்து வலுவாக வேர்கொண்டுள்ள நிலை இன்றைய பிரிவினைக் கோரிக்கைகளுக்கு ஆதாரமாக உள்ளது.

இன்று உருவாகியுள்ள தனி நாட்டுக் கோரிக்கைகள் என்பன சென்ற நூற்றாண்டின் தேசிய இனப் போராட்டங்களைப் போலன்றி இன வெறுப்பு இனப் பகை என்கிற அடிப்படையில் கட்டமைக்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணம். பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துப் பிரச்சாரம் மேற்கொண்ட ஸ்கொட்லாந்தியர்களின் முயற்சிகள் “ஸ்கொட்லாந்து தேசிய வாதம்” என அடையாளப்படுத்திவிட இயலாத அளவிற்கு ஒரு தீவிரமான சமூக ஜனநாயகத் திட்டத்தை முன் நிறுத்திய இயக்கமாகவே இருந்தது.

தலைமை ஏற்ற ஸ்கொட்லாந்தின் முதன்மை அமைச்சரும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் தலைவருமான அலெக்ஸ் சால்மோன், தனிநாடு கோரிக்கையில் சோ‘லிசச் சாய்வுடன் கூடிய ஒரு திட்டத்தையே முன்வைத்தார்.

எல்லோருக்குமான இலவசக் குழந்தைகள் காப்புத் திட்டம், பல்கலைக்கழகம் வரை இலவசப் படிப்பு, ஓய்வூதியத் திட்டங்கள், தேசிய மருத்துவ நலத்திட்டத்தைப்பொதுத் துறையின் கீழ்கொண்டு வருதல் முதலான வாக்குறுதிகளை சல்மோன் முன்வைத்து இயங்கினார்.

பேரழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்துவது, நேட்டோவின் அநீதியான தாக்குதல்களுக்கு ஒப்புதல் அளிக்காமை முதலான கொள்கை அறிவிப்புகளையும் அவர் செய்தார். ஆங்கில இனத்தின் ஆதிக்கம் என்பதாக அல்லாமல் தனியார் சொத்துக்களில் பாதிக்கு மேல் குவித்துக் கொண்டுள்ள 432 குடும்பங்களின் ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டித் தங்கள் தனி நாட்டுக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயினிலிருந்து பிரிந்து போக எத்தனிக்கும் கடலோனியாவின் கதை சற்று வேறானது. அது ஒப்பீட்டளவில் ஸ்பெயினின் சராசரி வருமானத்தைக் காட்டிலும் கூடுதலான வளமிக்க ஒரு பகுதி. வளமும் வருமானமும் குறைந்த ஸ்பெயினுடன் தன் வளத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லாததால் அது தனி நாடு கோரி வருகிறது. 1979இலும் 2006இலும் ஸ்பெயின் அரசு அப்பகுதியினரைத் தனித் தேசிய இனமாக அங்கீகரித்ததோடு சுயாட்சி உரிமையும் வழங்கியுள்ளது.

ஸ்கொட்லாந்து பிரிவினை இயக்கக் கோரிக்கை அளித்த உத்வேகத்தில், கடலோனிய மக்கள் மத்தியில் தனி நாடு குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படும் என அதன் தலைவர் ஆர்டர் மாஸ் அறிவித்தார். ஆனால் இப்படியான தன்னிச்சையான வாக்கெடுப்பிற்கு ஸ்பெயினின் அரசியல் சட்டத்தில் இடமில்லை என அந்நாட்டு பிரதமர் மரியானோ ரஜோய் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவிலும் கனடா போன்ற அதற்கு அப்பாலுள்ள நாடுகளிலும் இன்று உருவாகியுள்ள இந்தத் தனி நாட்டுக் கோரிக்கைகளுக்கும் சென்ற நூற்றாண்டின் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை இவ்வாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. பன்னாட்டு ஆதரவு, ஆயுதப் போராட்டம் பெரும் உயிரிழப்புகள், ஏதிலியராகவும் உள்நாட்டிலேயே இடம்பெயர்க்கப்பட்டவர்களாகவும் பெருந்திரள் மக்கள் அவதிக்குள்ளாதல் ஆகியன இந்த இயக்கங்களில் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.

2. இனப்பகை, இன வெறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும், இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றை முதன்மைப் படுத்தியும் இன்றைய இயக்கங்கள் கட்டமைக்கப்படவில்லை. மாறாக பொருளாதாரப் பிரச்சினைகள் இவற்றில் முன்னிலைப்படுத்தப் படுகின்றன.

3. தனி நாடு அமைக்கப்படும்போது எத்தகைய பொருளாதார மற்றும் அயல் உறவுக் கொள்கைகள் கடைப்பிடிக்கப் படும் என்கிற தெளிவான திட்டம் மக்கள் முன் வைக்கப்படுவது கவனத்துக்குரியது.

இவை பொதுமைப்படுத்தப்பட்ட பார்வைகள்தான். ஒவ்வொரு தனிநாட்டுக் கோரிக்கைக்கும் பிரத்தியேகமான பண்புகளும் உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ளத் தவறக்கூடாது. ஐரோப்பியச் சூழலுக்குரிய இந்த அம்சங்கள் நம் சூழலுக்கு அப்படியே பொருந்தி வராது என்பது எத்தனை உண்மையோ அத்தனை உண்மை உலகம் இப்போது பெரிய அளவில் மாறியுள்ளதன் விளைவாக வருங்கால தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் சென்ற நூற்றாண்டு தேசிய இனப் போராட்டங்களின் அச்சுப் பதிவாக இருக்க இயலாது என்பதும்கூட.

நவீன வெஸ்ட்மினிஸ்டர் பாணியிலான தேசிய அரசுகள் என்பன உலகெங்கிலும் 18ஆம் நூற்றாண்டிலும் அதன் பின்னும் உருவானபோது, அந்த உருவாக்கங்களில் காலனிய மற்றும் ஏகாதிபத்திய அரசுகள் முக்கிய பங்கு வகித்தன. இந்தியா இலங்கை முதலான நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டது, அவற்றுக்குள் மாநிலங்கள் செதுக்கி வடிவமைக்கப்பட்டது ஆகியவற்றில் ஏகாதிபத்தியங்களின் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவக் காரணங்கள் முக்கிய பங்கு வகித்தன.

பொருத்தமற்ற பகுதிகள் இணைக்கப்பட்டது, அல்லது ஒன்றாக இருக்க வேண்டியவை பிரிக்கப்பட்டது முதலான இந்த நடவடிக்கைகள் அந்தச் சமூகங்களின் மீதான பெரும் வன்முறையாகவும் பல நேரங்களில் அமைந்தன. இந்தியாவில் வட கிழக்கு மாநிலங்கள் உருவாக்கப்பட்டது இதற்கொரு சான்று. இன்று குறைந்த பட்சம் பத்துக்கும் மேற்பட்ட தனி மாநிலக் கோரிக்கைகள் இந்தியாவில் உள்ளன.

ஆட்டோமான் பேரரசு சிதைக்கப்பட்டு துருக்கியும், மார்க் சைக்ஸ், ஜோர்ஜ் பிகோட் முதலான பிரிட்டிஷ் மற்றும் ஃப்ரெஞ்ச் அதிகாரிகளின் அதிகாரவர்க்க அணுகல் முறைகளால் ஈராக், ஜோர்டான், பலஸ்தீனம், சிரியா முதலான நாடுகள் உருவாக்கப்பட்ட வரலாறும் இத்தகையதுதான்.,

இஸ்லாமியக் கருத்தாக்கங்களில் “தேச அரசு” என்பதைக்காட்டிலும் “உம்மா” என்கிற கருத்தாக்கம் அதிக முக்கியத்துவம் பெறுவது, ஷியா, சுன்னி வேறுபாடுகள் எதையும் அறியாத பிரிட்டிஷ் அதிகாரிகள் தமது எண்ணைக் கடத்தல் நோக்கத்தின் அடிப்படையில் அரபு நாடுகளின் தேச எல்லைகளை வரையறுத்தனர். இதன் எதிர்மறை விளைவுகள் இன்று வரை தொடர்கின்றன.

# மேற்குலக காலனியாக நாட்டை மாற்ற முயற்சி

## தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை



(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் உட்பட அந்த அணியினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தண்டனை வழங்கும் சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த முன்னணியின் பேச்சாளரான மொஹமட் முஸ்ஸாமில் இதனைக் கூறியுள்ளார்.

எதிரணியினரின் இந்த சவாலை தோற்கடிக்க சகல இலங்கையரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இனவாதம் மண்டும் தலைத்தூக்க இடமளிப்பதன் மூலம் நாட்டை மேற்குலக காலனித்துவ நாடாக மாற்ற சில சக்திகள் முயற்சித்து வருகின்றன.

இந்த சக்திகளை தோற்கடிக்கவும் தேசிய் சக்திகளை இரண்டாக பிளவுபடுத்த எதிர்க் கட்சி மேற்கொண்டு வரும் சதித் திட்டத்தை தோற்கடிக் கவும் தேசப்பற்றாளர்கள் ஒன்றிணைய வேண்டும் என முஸ்ஸாமில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தல் அரசின் செயற்பாடே காரணம்

## குற்றம்சாட்டும் ஐ.தே.க.



இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தலுக்கு இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் காரணமாகிவிட்டன என ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சீன அரசிடமிருந்து இலங்கை பெற்ற அத்தனை திட்டங்களுக்கான கடனை திருப்பி செலுத்த முடியாவிட்டால் அந்த திட்டங்கள் அனைத்தும் சீனாவிற்கு சொந்தமாக்கப்படும் என்று அமைச்சர்கள் தெரிவித்தமையே இந்தியாவின் சந்தேகம் அதிகரித்ததற்கான காரணம்.

இலங்கையில் சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் முதலானவற்றின் கடனை செலுத்தாவிட்டால் இவைகள் அனைத்தும் சீனாவிற்கு சொந்தமாக்கப்படும்.

இதனால், இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தமான அச்சுறுத்தலுக்கு இலங்கை அரசின் செயற்பாடுகள் காரணமாகிவிட்டன.

இதன் காரணமாகவே இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் இப்போதைய விஜயம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

பாதுகாப்பு ஆலோசகர்களின் விஜயம் வழமையானதாக இருப்பது சகஜம். ஆனால் இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள், இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமென இந்தியா கருதுவதற்கு இந்த அரசின் செயற்பாடுகள் முக்கிய காரணமாகிவிட்டன.

இப்பொழுது ஜனாதிபதி தேர்தல நடைபெற இருக்கும் காலகட்டத்தில் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தும் சம்பவமாகவே இது இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அஜித்டோவல்- ரணில் மூடிய அறையில் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன், தனியாக மூடிய அறைக்குள் இரகசியப் பேச்சு நடாத்தியுள்ளார். இந்தச சந்திப்பு கொழும்பிலுள்ள தாஜ் விடுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க தலைவர்களுடன, அஜித் டோவல் நடாத்திய சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து கலந் துரையாடப்பட்டதாக தகவல்கள வெளியாகியுள்ளன.





ஐ.தே.க தலைவர்களுடனான குறுகிய நேர சந்திப்பு ஒன்றையடுத்து, ரணில் விக்கிரமசிங்கவுடன், தனியாக சுமார் 10 நிமிடங்கள் பேச்சு நடாத்தியுள்ளார் அஜித் டோவல்.

இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்றும், தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும், கொழும்பிலுள்ள முக்கிய வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிரணியின் தேர்தல் மூலோபாயம் மற்றும் பரப்புரைத் திட்டங்கள் குறித்தும், அஜித் டோவல் விசாரித்து அறிந்து கொண்டுள்ளார்.

மேலும், இந்தியாவின் கரிசனைக்குரிய முக்கிய விவகாரமான, சீனாவின் தலையீடு குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், நேற்று முன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையும் தனியாகச் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளார்.

# ரணிலின் பரீட்சையை எழுதுகிறார் மைத்திரி

(கொழும்பு)

எதிரணியின் பொது வேட்பாளரான முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எழுத வேண்டிய பரீட்சையையே எழுதிகொண்டிருக்கின்றார் என நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுக அபிவிருத்தி திட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பேருவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர, மேற்கண்டவாறு தெரிவித்தார். விக்ரமசிங்கவின் சூழ்ச்சிக்குள் மைத்திரிபால சிறிசேன சிக்கிக்கொண்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஜப்பான் சிறையிலிருந்த இலங்கையர் மரணம்

(கொழும்பு)

ஜப்பான் சிறைச்சாலையில் இலங்கையர் ஒருவர் மரணமாகியுள்ளார். குறித்த இலங்கையருக்கு நெஞ்சுவலி இருப்பதாக முறையிடப்பட்ட போதும் அதிகாரிகள் அது தொடர்பில் சிரத்தை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையிலேயே அவர் மரணமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நிக்கலஸ் பெர்ணான்டோ (வயது 57) என்பவரே மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் கடந்த நவம்பர் 22ஆம் திகதி அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முதல் நாள் இரவு 7 மணியில் இருந்தே இவருக்கு கடுமையான நெஞ்சுவலி இருந்ததாக கூறப்பட்ட போதும் சிறைக்காவலர் அதனை பொருட படுத்தவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த இலங்கையர் எதற்காக சிறை வைக்கப்பட்டிருந்தார் என்ற தகவலை ஜப்பானிய ஊடகங்கள் வெளியிடவில்லை.

# சீனாவிற்கு இரத்தினக்கல் கடத்த முயன்றோர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கற்களை கடத்திச் செல்ல முயற் சித்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவின் - சாங்காய் நோக்கிச் செல்லவென விமான நிலையத்தில் இருந்த பம்பலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இவர்களது பயணப் பைகளில் இருந்து 218 இரத்தினக் கற்கள் மீட்கப்பட்டதாகவும் அவற்றின் நிறை 548 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இரத்தினக் கற்கள் பெறுமதி 54 இலட்சத்திற்கும் அதிகம் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினக் கற்கள் அரசுடமை யாக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவருக்கும் தலா ஒரு இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதித் தேர்தல் -2015

## 300 கோடி செலவு

ஜனாதிபதித் தேர்தலுக்காக 300 கோடி ரூபா செலவாகும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யு.அமரதாச தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்கு அட்டைகள், வாக்காளர் அறிவித்தல்கள் உள்ளிட்ட தேர்தல் செயலகத்தின் அடிப்படை செயற்பாடுகளுக்கும், காவல்துறை மற்றும் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கும் இந்த நிதி செலவிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர, தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரச ஊழியர்களுக்கும் இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்தே செலவிடப்படவுள்ளது.

## ஐவர் செலுத்தினர் கட்டுப்பணம்

(கொழும்பு)

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை ஐவர் கட்டுப்பணம் செலுத்தியுள் ளதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

ஐ.ம.சு.மு. செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ சார்பில் நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தினார். ஏற்கனவே, ஜனசெத்த முன்னணி சார்பில் வண.பத்த ரமுல்ல சீலரத்ன தேரர், ஒக்கொம வெசியோ ஒக்கொம ரஜவரு அமைப்பு சார்பில் எம்பி. பெமினி முல்ல, சோசலிச சமத்துவக் கட்சி சார்பில் பானி விஜேய சிரிவர்தன, ஐக்கிய சோசலிசக் கட்சி சார்பில் சிரிதுங்க ஜெயசூரிய ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார்

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தும் கால எல்லை எதிர்வரும் 7 ஆம் திகதி நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடையும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பதிவு செய்த அரசியல் கட்சியொன்றிடமிருந்து 50 ஆயிரம் ரூபாவும், சுயாதீன வேட்பாளர் ஒருவரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப் பணமாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது

## விசேட முறைப்பாட்டு நிலையங்கள்

தேர்தல் வன்முறைகளை பதிவு செய்வதற்காக நாடுமுழுவதும் 25 விசேட பொலிஸ் முறைப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதி தேர்தல்கள ஆணையாளர் எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் திணைக்களம், பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கோனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இந்த விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையங்கள் நேற்றுமுன்தினம் முதல் செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஒவ்வொரு பொலிஸ் முறைப்பாட்டு நிலையமும் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பரீட்சகர் தலைமையில் 10 பொலிஸ் குழுக்களைக் கொண்டு சுயாதீனமாக இயங்க வேண்டுமெனவும் இந்த பொலிஸாரில் ஒரு சிலராவது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமெனவும் தேர்தல்கள் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது.

இதற்கமைய 25 மாவட்டங்களி னதும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்களுடன் இணைந்ததாக இந்த பொலிஸ் முறைப்பாட்டு நிலையங்கள் இயங்குமெனவும் அவர் கூறினார்

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மூன்றாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு - 2014

மூன்றாவது சர்வதேசஆராய்ச்சி மாநாட்டினை நாளையும் நாளை மறுதினமும் கிழக்குப் பல்கலைக்கழகம் நடாத்தவுள்ளது.

இவ்வருட சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டிற்காக "புதுமையாக்கம் ஊடாக நிலைத்திருக்கும் அபிவிருத்தி" (Sustainable Development through Innovations) எனும் கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் உணவு ஊட்டச்சத்து, பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், வியாபாரம் மற்றும் தொழிற்துறை, காலநிலைமாற்றம், சுற்றுச்சூழல், மருத்துவம், மனிதநலன் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர்கள் தமது ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கும்படி தேசிய மற்றும் சர்வதேசமட்டத்தில் கோரப்பட்டது.

இதற்கிணங்க விவசாயம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பாக இருபத்தியொரு ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் பதினைந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் துறைசார்ந்த மூன்றுபேர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழுவினரால் அளிக்கை செய்வதற்கு தகுதியுடையவைகள் என சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பிரயோகவிஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக ஆறு ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றில் மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகள் துறைசார்ந்த மூன்று பேர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழுவினரால் அளிக்கை செய்வதற்கு தகுதியுடையவைகள் என சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

வியாபாரம் மற்றும் தொழிற்துறை சார்ந்து பன்னிரெண்டு ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

**துறைசார்ந்த நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர்களால் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டுள்ள ஆய்வுகள் முன்நிலைப்படுத்தப்படும்.**

இவற்றில் ஏழு ஆராய்ச்சிக் கட்டுரைகள் துறைசார்ந்த மூன்று பேர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழுவினரால் அளிக்கை செய்வதற்கு தகுதியுடையவைகள் என சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

மருத்துவம் தொடர்பாக பத்தொன்பது ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் ஒன்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் துறைசார்ந்த மூன்று பேர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழுவினரால் அளிக்கை செய்வதற்கு தகுதியானவை என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

மனிதநலன் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் சார்பாக எண்பத்திநான்கு ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றில் நாற்பத்திரெண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் துறைசார்ந்த மூன்று பேர்கள் கொண்ட மதிப்பீட்டுக் குழுவினரால் அளிக்கை செய்வதற்கு தகுதியுடயவைகள் என சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

மனிதநலன் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் தொடர்பாக அளிக்கை செய்யப்படவுள்ள ஆய்வுக்கட்டுரைகளில் கல்வி, மெய்யியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், நுண்கலை, பொருளியல், மொழி, நாடகமும் அரங்கியலும், சமூகவியல், வரலாறு ஆகிய துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன.

இவ்வாய்வுக் கட்டுரைகள் தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டுள்ளதுடன், துறைசார்ந்து நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளை முன்னிலைப்படுத்துகின்றன. இவ்வகையில் இவ்ஆய்வுக் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், முடிவுகள் அனைத்திற்கும் ஆராய்ச்சியாளர்களே பொறுப்புடையவர்களாவர்.


இம்மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக கலாநிதி சுனில் ஜெயந்தநவரத்னா (Dr.Sunil JayanthaNawarathna) செயலாளர், உயர்கல்விஅமைச்சு அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் இருளாண்டி முத்தையா, நாட்டுப்புறவியல்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பிரதான உரையினை தயானந்த எஸ்.விஜயசேகர, தகைசால் பேராசிரியர், (Emeritus) பொறியியல் துறை, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.


இம்மாநாடு தேசிய, சர்வதேச மட்டத்திலுள்ள அறிவியலாளர்கள், புலமையாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை அரங்கப்படுத்துவதற்கு களத்தினை அமைத்துக் கொடுத்திருப்பதுடன், இவ்வாறான புலமைசார் ஆராய்ச்சியின் மூலம் கிழக்குப் பல் கலைக்கழகம் தொடர்ந்தும் தேசிய அபிவிருத்திக்கும், பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் தனது பங்களிப்பினை நீடித்துக் கொண்டுள்ளது.

சர்வதேச ஆராய்ச்சி
மாநாட்டு செயற்குழு
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை








சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் ஜேர்மன் அரசின் உதவியுடன் சர்வதேச தரத்திலான உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தை நேற்றையதினம் பிற்பகல் 1.50 மணியளவில் யாழ். அரியாலைப் பகுதியில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோசப் ஷெப் பிளாட்டர் திறந்து வைத்தார்.

## மெக்கலம் நீக்கம்



பாகிஸ்தானுக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணித்தலைவர் பிரன்டன் மெக்கலத்துக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அணி வீரர் பிலிப் ஹியூஸ் மரணத்தால் மன உளைச்சலில் இருப்பதாக தெரிவித்து இருந்த பிரண்டன் மெக்கலம், வேகப்பந்து வீச்சாளர்கள் டிம் சவுதி, டிரென்ட் பவுல்ட் ஆகியோருக்கு பாகிஸ்தானுக்கு எதிரான ரிதொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

## உலககிண்ண பயிற்சி ஆட்டம் அட்டவணை வெளியிட்டது ஐ.சி.சி




உலக கிண்ண கிரிக்கெட் சுற்றுக்கான பயிற்சிப் போட்டிகளின் விபரங்களை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி, உத்தியோக பூர்வமற்ற 14 பயிற்சிப் போட்டிகள், அடிலெய்ட், கிரிஸ்ட்சேர்ச் மேல்பேர்ன் மற்றும் சிட்னி மைதானங்களில் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் பெப்ர்வரி 8 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை குறித்த போட்டிகள் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பெப்ரவரி 08 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெறவுள்ள முதல் போட்டியில் இந்திய அவுஸ்ரேலிய அணிகள் மோதவுள்ளன.

மறுநாள் 9 ஆம் திகதி ஓவலில் தென்னாபிரிக்காவுடன் இலங்கையும் கிறிஸ்சேர்ச்சில் நியூசிலாந்து, சிம்பாப்வேயும் அதே மைதானத்தில் இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகளும் சிட்னியில் பாகிஸ்தான்-பங்களாதேஷ் அணிகளும் மோதவுள்ளன.

பெப்ரவரி 10 ஆம் திகதி சிட்னியில் அயர்லாந்து-ஸ்கொட்லாந்துடனும் அடிலெய்டில் இந்திய-ஆப்கானிஸ்தானுடனும் மோதவுள்ளன.

பெப்ரவரி 11 இல் கிறிஸ்சேர்ச்சில் நியூசிலாந்து-தென்னாபிரிக்காவுடனும் அதே மைதானத்தில் இலங்கை-சிம்பாப்வேயுடனும், மெல்பேர்னில் அவுஸ்ரேலிய ஐக்கிய அரபு எமிரேட்சும் சிட்னியில் இங்கிலாந்து-பாகிஸ்தானுடனும் மோதவுள்ளன.

பெப்ரவரி 12 ஆம் திகதி சிட்னியில் மேற்கிந்தியதீவுகள்-ஸ்கொட்லாந்துடனும், அயர்லாந்து-பங்களாதேசுடனும், பெப்ரவரி 13 இல் மெல்பேர்னில் ஆப்கானிஸ்தான்-ஐக்கிய அரபு எமிரேட்சுடனும் மோதவுள்ளன.


## விளையாடும் மனநிலையில் வீரர்கள் இன்னும் இல்லை

இந்திய அவுஸ்ரேலிய அணிகள் மோதும் போட்டி அட்டவணை மாற்றி அமைக்கப்பட்டாலும் வீரர்கள் இன்னும் மன ரீதியாக விளையாடுவதற்கு தயார் நிலையில் இல்லை என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தலைவர் ஜேம்ஸ் சதர் லண்ட் கூறியதாவது,

ஹியூக்சின் மரணம் அவுஸ்ரேலிய வீரர்களை வெகுவாக பாதித்துள்ளது. அவர்கள் அந்த அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி அட்டவணையை மாற்றி அமைத்து இருந்தாலும் வீரர்கள் விளையாட இன்னும் மனரீதியாக தயார் நிலையில் இல்லை.

வீரர்களின் மனநிலையை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது ஹியூக்ஸின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறுகிறது. இதற்குப் பிறகு வீரர்கள் மனநிலையில் மாறுதல் ஏற்படும். டெஸ்ட் போட்டி தொடங்கும் நேரத்தில் அவர்கள் அழுத்தத்துடன் இருக்கமாட்டார்கள். என அவர் கூறியுள்ளார்.

## அறிமுக வீரரின் ஹட்ரிக்கில் தொடரை வென்றது பங்களாதேஷ்



சிம்பாப்வே அணியுடனான 5ஆவது ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்று 5-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக கைப்பற்றியது. அந்த அணியின் அறிமுக வீரர் தைஜுல் இஸ்லாம் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி அபார சாதனை படைத்தார்.


மிர்பூரில் நேற்று முன்தினம் நடந்த இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 30 ஓவரில் 128 ரன் மட்டுமே எடுத்தது. தொடக்க வீரர் ஹமில்டன் மசகட்சா 52 ரன் வுசிசிபந்தா 37 ரன் எடுக்க, மற்றய வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ரன்னில் வெளியேறினர்.

. 17.3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 95 ரன் எடுத்திருந்த சிம்பாப்வே அணி, மேற்கொண்டு 33 ரன் மட்டுமே சேர்த்து 9 விக்கெட்டை பறி கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய தைஜுல் இஸ்லாம் ஹட்ரிக் உட்பட 4 விக்கெட்டுகளை கைப் பற்றனார் ஒருநாள் போட்டி வரலாற்றில், ஹட்ரிக் சாதனை படைத்த முதல் அறிமுக வீரர் என்ற பெருமை அவருக்கு கிடைத்துள்ளது

. அடுத்து 50 ஓவரில் 129 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ், 24.3 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 130 ரன் எடுத்து வென்றது. மகமதுல்லா 51, சபிர் ரகுமான் 13 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பங்களாதேஷ் 5-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாகக் கைப் பற்றியது. தைஜுல் இஸ்லாம் ஆட்ட நாயகன் விருதும், முஷ்பிகுர் ரகிம் தொடர் நாயகன் விருதும் பெற்றனர்.

## இரண்டு முறை மட்டுமே வீசப்பட்ட பவுன்சர்



(டுபாய்)

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் மொத்தம் 2 முறை மட்டுமே பவுன்சர் வீசியது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்ரேலிய வீரர் பிலிப் ஹியுசை, (25), சக வேகப்பந்து வச்சாளர் அப்போட் வீசிய பவுன்சர் தாக்கியது. இதில் பலத்த அடிபட்ட ஹியுஸ், நினைவு திரும பாத நிலையிலேயே மரணம் அடைந்தார்.

இவரது மரணம் காரணமாக, பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதிய 3ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆவது நாள் இரத்து செய்யப்பட்டது.

மறுநாள் போட்டி தொடர்ந்த போது, பாகிஸ்தானுக்கு எதிராக, நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் ஒரு பவுன்சர் கூட வீசாமல் ஹியுசிற்கு மரியாதை செலுத்தினர்.

தவிர, இப்போட்டியின் கடைசி நாளில் மட்டும், நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் பவுல்ட், இரண்டாவது இனிங்சில் இரு பவுன்சர் வீசினார்.

இதுகுறித்து நியூசிலாந்து பயிற்சியாளர் மைக் ஹெசன் கூறுகையில், ஹியுஸ் மரணம் எங்களையும், அணி நிர்வாகத்தையும் அதிகமாக பாதித்துவிட்டது. அவருக்கு மரியாதை தரும் வகையில், ஒரு நாள் முழுவதும் பவுன்சர் வீசாமல் விளையாடினோம். மூன்றாவது நாளில் களத்தில் யாரும் ஹெல்மெட் அணியாமல் தான் விளையாடினர், என்றார்.

## இன்றைய போட்டியில் மஹேல இல்லை?

இங்கிலாந்து அணிக்கு எதிரான இன்றைய மூன்றாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில மஹேல ஜய வர்தன பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் போட்டியில் இருந்து விலகியுள்ளளதாக இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.

ஜயவர்தனவிற்கு பதிலாக இந்தப் போட்டியில் இந்தியாவிற்கு எதிரான தொடரில் இடம்பெற்றிருந்த 25 வயது அஷான் பிரியன்ஜன் இணைத்துக்கொள்ளப்படலாம் என தெரிவிக்ப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு சர்வதேச ஒருநாள் போட்டியிலும பங்கேற்காத, திலின கண்டம்பி, மஹேல ஜயவர்தனவிற்கு பதிலாக களமிறக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.



எனினும் இங்கில்ாந்து அணிக்கு எதிராக நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டியில் மஹேல ஜயவர்தன பற்கேற்பார் என இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் மைக்கல சொய்சா தெரவித்துள்ளார்.

# அறிவு சார்ந்த சமூகத்தின் கைகளில் நாட்டின் எதிர்காலத்தை வழங்கவேண்டும்

## கிளி இந்துக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

அறிவுள்ள ஆரோக்கியமான சமூகத்தால் மட்டுமே விடுதலையை பெற்றுக்கொள்ளவும் தக்க வைக்கவும் முடியும் என்ற நெல்சன் மண்டேலாவின் கருத்துக்கு இணையாக எமது சமூகத்தின் கல்விமேம்பாடடுக்கான செயற்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முன்னெடுத்து வருகின்றார்.

அத்தோடு எமது தேசத்தின் எதிர்காலம் அறிவார்ந்த சமூகத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற அவரின் சிந்தனையை கல்விச் சமூகத்தினராகிய நாம் வரவேற்கின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித் துறை மேம்பாட்டில் அவர்காட்டும் அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம். என கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் அதிபர் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் விசேட நிதியீட்டத்தின் கீழ் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் ஒன்று கூடல் மண்டபத்திற்கான தளபாட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்விற்கு தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பழமைவாய்ந்த வரலாற்றையும் பல அறிஞர்களையும் கல்வியியலாளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரிய கல்லூரியாக கிளி/இந்துக்கல்லூரி விளங்குகின்றது.

அண்மைக்காலமாக இக் கல்லூரி மிகப்பெரும் நிதியீட்டத்துடனான பௌதீகவளங்களை தொடர்ச்சியாக பெற்று வருகின்றது. யுத்தத்திற்கு பின் இக்கல்லூரி துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணப்பாங்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் மேலோங்கி காணப்படுகின்றமையினாலேயே இக் கல்லூரி முன்னேற்றத்தின் பாதையில் வேகமாக பயணித்துக்கொண்டிருக்கின்றது.

அதனடிப்படையில் இப்பாடசாலையை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்குவதற்கான முயற்சிகளை அவர் முன்னெடுத்தார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளிகள் தினம்

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் இன்று புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத்தின் தலைவர் தி.சிவமாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரையும் டிப்போ சந்தியில் மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் கூட்டுறவு மண்டபத்தில் மாற்றுத் திறனாளிகள் தின கலை நிகழ்வுகளும், கருத்துரைகளும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர் இராசரத்தினம் அரவிந்தன் கலந்து கொள்ள உள்ளனர்.

கிளிநொச்சியில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் ஒத்துழைப்பை வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு வடமராட்சியில் இராணுவம் முயற்சி



தாழமுக்கம் காரணமாக தொடர்ந்து பெய்யும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தை இராணுவத்தினர் வெளியேற்ற வாய்க்கால்கள் அமைத்து வருகின்றனர்.

வடராட்சி வடக்கில் பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பொலிகண்டி, பருத்தித்துறை முனை, தும்பளை கிழக்கு, கற்கோவளம் புனிதநகர், வல்லிபுரவெளி, திருமால்புரம் மற்றும் 61 வீட்டுத்திட்டம் போன்ற கிராமங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

வல்லிபுரவெளி, திருமால்புரம் பகுதி வெள்ளத்தை வெளியேற்ற 551 ஆவது படைப்பிரிவின் இராணுவத்தினர் பக்கோ இயந்திரம் மூலம் வாய்க்கால் அமைத்து வெள்ள நீரை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

மாகாணசபையும், உள்ளூராட்சி நிர்வாகமும் மேற்கொள்ள வேண்டிய வடிகாலமைப்பு வேலையை, மக்களின் நலன்கருதி இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் கூட்டமைப்பு பிரதிநிதிகளோ மக்களுக்கான நிரந்தர ஏற்பாடுகளை மேற்கொள்ளாமல் அரை இறாததல் பாண் கொடுத்து அதனைப் படம் எடுத்து விளம்பரம் தேடுவதில் நீயா? நானா? எனப் போட்டி போட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# காலாவதியான பொருட்கள் ஏழாலையில் விற்பனை

(ஏழாலை)

ஏழாலை பிரதேசத்தில் உள்ள கடைகளில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் அப்பிரதேச பொதுமக்கள் பலரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

குறிப்பாக பிஸ்கற் மற்றும் பால்மா வகைகளே திகதி முடிவுற்ற நிலையிலும் பழுதடைந்து பாவனைக்கு உதவாத நிலையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (66)

# மருதடி விநாயகர் ஆலய யந்திர பூசை ஆரம்பம்

எதிர்வரும் மாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை வரும் சங்கடகரசதுர்த்தியன்று காலை 8 மணிக்கு யந்திரபூசை ஆரம்பமாகி தொடர்ந்து 45 நாட்களுக்கு இடம் பெறவுள்ளது.

மானிப்பாய் மருதடியானின் மெய்யடியார்கள் இவ் அரிய யந்திர பூஜையினை தரிசிப்பதோடு மகாகும்பாபிஷேகத்தையும் தரிசிக்குமாறு மருதடி விநாயகர் ஆலய தர்மகத்தா சபையினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை பிள்ளையார் பெருங்கதை விரதம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 27 ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது.

விரதநாட்களில் தினமும் முற்பகல் 10 மணிக்கு பெருங்கதை படிப்பும் தொடர்ந்து அபிஷேகம், பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளதாக மருதடி விநாயகர் ஆலய தர்மகத்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## மிதுனம்



**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம்)**

**சச்சரவுகளை தவீர்த்து சமாதானத்தை விரும்பும் மிதுனராசிக்காரர்களே!**

சமாதானத்தை விரும்பும் நீங்கள், சச்சரவுகளை தவிர்ப்பீர்கள். இதுவரை உங்களின் 5 ஆம் வீட்டில் அமர்ந்துக் கொண்டு உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தி, பிரச்னைகளையும் தந்து உங்களை நிம்மதியில்லாமல் செய்த சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலக் கட்டங்களில் அதிரடி யோகம் தரும் 6-ஆம் வீட்டில் அமர்ந்து பல இன்ப அதிர்ச்சிகளையும், பணவரவையும் அள்ளித்தரவுள்ளார்.

இதுவரை பிள்ளைகள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தும் அவர்களை திருப்திபடுத்த முடியாமல் திணறினீர்களே! அந்த அவல நிலையெல்லாம் இனி மாறும். பிரிந்திருந்த கணவன்-மனைவி ஒன்று சேருவீர்கள். குடும்பத்தில் தென்றல் வீசும். அழகு, ஆரோக்கியம் கூடும். சமயோஜித புத்தியாலும், மாறுபட்ட அணுகுமுறைகள் மூலமாகவும் பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

*சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:*

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்களின் சப்தம-ஜீவனாதிபதியான குருவின் சாரத்தில் விசாகம் நட்சத்திரம் 4 ஆம் பாதம் 6 ஆம் வீட்டில் சனி செல்வதால் திடீர் இழப்புகள், மனதில் இனம்புரியாத பயம், ஏமாற்றங்கள், பண விரயம், மனைவிக்கு முதுகு, மூட்டு வலி, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்துப் போகும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை சனி உங்கள் ராசிக்கு 5 ஆம் வீடான துலாம் ராசியில் விசாகம் நட் சத்திரம் 3 ஆம் பாதத்தில் செல்வதால் முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வரும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தாமதமாகி முடியும். பூர்வீக சொத்துப் பிரச்சினை தலைத்தூக்கும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாகம் நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மாதக்கணக்கில் தள்ளிப் போன காரியங்களெல்லாம் விரைந்து முடிவடையும். சொந்த-பந்தங்களால் அன்புத் தொல்லை உண்டு. உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும்

உங்களின் அஷ்டம-பாக்யாதிபதியான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனு'ம் நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் நிம்மதி உண்டாகும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். வீடு கட்ட வாங்க, சொந்தமாக தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலக்கட்டங்களில் சனிபகவான் அனுஷம் நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் திட்டமிடாத பணிகளில் ஈடுபடாதீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. அநாவசியச் செலவுகளை தவிர்க்கப்பாருங்கள்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் ராசியாதிபதியும் - சுகாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் எதிர்ப்புகள் குறையும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். புது வேலை அமையும். ஷேர் மூலம் பணம் வரும். உங்கள் ரசனைக் கேற்ப வீடு வாகனம் வாங்குவீர்கள்.

உத்தியோகத்தில் இருந்து வந்த அதிருப்தி விலகும். உயரதிகாரிகள் உங்களின் கடின உழைப்பைப் புரிந்துகொண்டு பாராட்டுவார்கள். சக ஊழியரகளுடன் இருந்த மோதல்கள் நீங்கும். விரும்பிய இடத்திற்கே மாற்றம் கிடைக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு உண்டு. உத்தியோகம் சம்பந்தப்பட்ட வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

கன்னிப் பெண்கள் கல்வியும் இனிக்கும், காதலும் இனிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். நல்லவர்களின் நட்பால் முன்னேறுவீர்கள். கல்யாணம் கூடி வரும். வேற்றுமாநிலத்தில் அல்லது அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். மாணவ-மாணவிகள் படிப்பில் முன்னேறுவீர்கள். விளையாட்டு, கலைப் போட்டிகளிலும் வெற்றி பெறுவீர்கள். சக மாணவர்கள் மத்தியில் மதிப்புக் கூடும்.

இந்த சனிப் பெயர்ச்சி எங்கும் எதிலும் திடீர்யோகங்களையும், எதிர்பாராத வெற்றிகளையும் தருவதாக அமையும்.

(நாளை கடகம்)

# தடைகளை தாண்டுமா மகிந்த அரசு?



ஜனாதிபதி தேர்தலிற்கான அறிவிப்பு வெளிவந்த கையுடன், கூட இருந்தவரே குழிபறித்தது போன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அரசில் இருந்து விலகி எதிரணி பொதுவேட்பாளராக களம் இறங்கியிருக்கிறார்.

இதற்கான திட்டம் மிக மிக இரகசியமாக முன்னெடுக்கப் பட்டுள்ளது. இந்த நகர்வு தொடர்பான அனைத்து தொடர்புகளுக்கும் செய்மதித் தொலைபேசிகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

செய்மதித் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பது கடினமானது என்பதால் அரச புலனாய்வாளர்களை ஏய்ப்பதற்கு இந்த வழிமுறை கையாளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கம் உறுதியாக இருப்பதாக மகிந்த ராஜபக்' தெரிவித்துள்ளதுடன் மைத்தரிபாலவுக்காக கவலையடைவதாகவும் குறிப்பிட்டு இருந்தார். அரசாங்கம் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் தோல்வியடையும் என்று சிலர் கூறிய போதிலும் தடையை அரசாங்கம் அதிகப் பெரும்பான்மையுடன் தாண்டி விட்டது. இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலிலும் தடை தாண்டுவோம் என அரசாங்கம் உறுதியாக கூறுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 95 பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் 'சரத் பொன்சேகா' தலைமையிலான கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் நாடளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை எதிர்த்து போட்டியிடுவதற்காக அரசாங்கத்தில் இருந்து வெளியேறி இருந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜாதிக ஹெலஉறுமய கட்சியின் நாடாளுன்ற உறுப்பினர்களும் வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

இவ்வாறு வரவு செலவுத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னகர்த்திய அரசாங்கம் அடுத்த கட்டமாக தனக்கு வரப்போகும் தடைகளையும் தாண்டுமா? என்ற கேள்வி இன்று பலமாக எழுந்து இருக்கிறது.

தற்போதைய இந்த புதிய அரசியல் உருவாக்கத்தின் பின்னணியில் மேற்குலக நாடுகள் பின்புலமாக செயற்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சர்வதேச நாடுகள் ஒரு மரப்பொம்மை அரசை உருவாக்க முயற்சி செய்வதாக

- வே.அர்ச்சுணன் -

அரசாங்க அமைச்சர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெரும குற்றம் சாட்டி இருக்கிறார்.

அதுபோல, இலங்கையில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் முயற்சிப்பதாக அமைச்சர் நிமால் ஸ்ரீபால டீ சில்வாவும் குற்றம் சாட்டியிருக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக பத வியில் அமர்த்த வேண்டிய தேவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடையாது. சவால்கள் நிறைந்த சூழலில் மேலும் மேலும் பலமடைந்த கட்சி என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை கட்சி உறுதிப்படுத்தும் என்றும் அமைச்சர் நிமால் நம்பிக்கை வெளியிட்டு இருக்கின்றார்.

தங்களுக்குப் பின்னால் வெளிநாட்டு சக்திகள் செயற்படுகின்றன என்ற கூற்றை மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ளதுடன் நாட்டு மக்களின் நலனுக்காகவே நாங்கள் ஒன்றாக இணைந்து இருக்கிறோம் இதை குழப்புவதற்காக தேவை இல்லாமல் பழிபோடுகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் அன்றைய தினம் தான் பண்டாரநாயக்காவின் பிறந்த தினமும், அவரது கட்சிக்கு புத்துயிரும் கிடைக்கும் தினமாக அன்றைய தினம் இருக்கும் என்று மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தற்போது இலங்கை சுதந்திரக் கட்சியில் இருக்கின்றாரா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்றாரா? என்ற கேள்வியையும் அரசதரப்பினர் எழுப்பத் தவறவில்லை.

எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு தாண்டிய அரசாங்கம் இந்த தேர்தலிலும் தடைகளை எல்லாம் தாண்டும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள மகிந்த தரப்பு, அதற்கான காய் நகர்த்தல்களாக நேற்றுவரை தமது தீவிர எதிரிகளாக இருந்தவர்களை எல்லாம் வளைத்து வருகிறது.

---

வியட்நாமை சேர்ந்த நுகுயென் ஹாங் என்ற சிகையலங்கார நிபுணர், கத்திரிக்கோலுக்கு பதிலாக, நீண்ட வாள் மூலம், முடி வெட்டி அசத்துகிறார். வாளை அப்படியும், இப்படியுமாக சுழற்றி, வேண்டும் விதத்தில் முடிவெட்டும் இவரின் வேகத்தை பார்த்து, இவருக்கு ஏராளமான வாடிக்கையாளர்கள் உருவாகி விட்டனர். அவர் கூறுகையில், "ஒரு போட்டியில் கத்திரிக்கோலைப் பயன்படுத்தாமல், சிறிய வாளைப் பயன்படுத்தி முடி வெட்டினேன்; இது, எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி விட்டது. இதனால், முறையாக பயிற்சி பெற்று, வாள் மூலம் முடிவெட்டுகிறேன். தொடக்கத்தில் சிரமமாக இருந்தாலும், இப்போது பழகி விட்டது..." என்கிறார்.



## தலையில் வாள்வீச்சு!

---

## கே.வி. மகாதேவன் 36



- பி.ஜி.எஸ்.மணியன் -

"இருவர் உள்ளம்" படத்திற்குப் பிறகு எல்.வி. பிரசாத் வங்காளத்தில் வெற்றி பெற்ற ஒரு படத்தின் உரிமையை வாங்கினார். அது கதாநாயகியை மையமாக வைத்து பின்னப்பட்ட கதை. புன்னகை அரசி கே.ஆர்.விஜயா இரட்டை வேடத்தில், அவருக்கு ஜோடியாக ரவிச்சந்திரன்.

உச்ச நட்சத்திரங்களின் படத்துக்கு இணையாக படம் இருபத்தைந்து வாரங்கள் ஓடி வெள்ளி விழாக் கொண்டாடி அனைவரையும் பிரமிக்க வைத்தது.

கே.வி. மகாதேவனின் இசையில் மலர்ந்த பாடல்கள் அனைத்துமே - வெற்றித்தடாகத்தில் மிதக்க - மலர்ந்தது "இதயக் கமலம்".

தமிழ்த் திரை உலகின் சாதனைப் படங்களின் வரிசையில் "இதயக் கமலம்" படத்திற்கும் கண்டிப்பாக இடம் உண்டு.

எம்.ஜி.ஆர் - சிவாஜி போன்ற உச்ச நட்சத்திரங்கள் கிடையாது.

அப்போதுதான் திரை உலகில் அறிமுகமாகி இருந்த ரவிச்சந்திரன் - கே.ஆர். விஜயா ஆகிய இருவரின் திறமை மீது நம்பிக்கை வைத்து - வண்ணத்திரைப்படமாக தயாரித்து ஒரு வெள்ளி விழாப்படமாக கொடுக்க முடிந்தது என்றால் அது மகத்தான சாதனை தானே.

ரவிச்சந்திரன் - கே.ஆர். விஜயா இருவரையும் தவிர ரசிகர்களுக்கு தெரிந்த முகங்கள் என்றால் அது ஷீலா, ருக்மணி (நடிகை லக்ஷ்மியின் தாயார்) ஆகிய இருவர்தான் என்னும்போது அந்த வியப்பு அதிகமாகத்தான் செய்கிறது.

பாடல்கள் அத்தனையுமே சூப்பர் ஹிட் பாடல்கள்தான்.

கதாநாயகன் ரவிச்சந்திரனுக்கு பி.பி. ஸ்ரீநிவாஸையும், இரட்டை வேடமேற்ற கே.ஆர். விஜயாவுக்கு பி.சுசீலா, எஸ். ஜானகி ஆகிய இருவரையும் பாடவைத்தார் கே.வி. மகாதேவன்.

இரண்டாவது கதாநாயகியான ஷீலாவிற்கும் பி. சுசீலாவின் குரலில் ஒரு பாடல்.

"நீ போகுமிடமெல்லாம் நானும் வருவேன் போ போ போ" - பி.பி. ஸ்ரீனிவாஸ் - பி. சுசீலாவின் இணைவில் ஒரு அருமையான டூயட். விறுவிறுப்பான இணைப்பிசையும் பாடலுக்கான மெட்டும் மனதை கவருகின்றன.


"தோள் கண்டேன் தோளே கண்டேன்" - பி.பி. ஸ்ரீநிவாஸின் கந்தர்வக் குரலுக்குப் பின் ஹம்மிங்கிலேயே அவரைத் தொடர்வார் பி.சுசீலா. சரணத்துக்குச் சரணம் மாறும் இணைப்பிசையில் தான் எத்தனை பரிமாணங்கள்!

இப்போதெல்லாம் வெரைட்டி வெரைட்டி என்று பெரிதாகத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகிறோமே அந்தச் சாதனைகளைச் சத்தமே இல்லாமல் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் கே.வி. மகாதேவன்.

இந்த ஒரு பாடலில் மட்டும் என்று இல்லை. கே.வி. மகாதேவனின் இசையில் வெளிவந்த பாடல்களில் ஒன்றுக்கொன்று அவர் கொடுத்திருக்கும் வித்தியாசமான நுணுக்கங்களும் அசைவுகளும் "அட" என்று புருவங்களை உயர்த்தவைக்கும்.

"மேளத்தை மெல்லத்தட்டு மாமா - உன் தாளம் இப்போ சரிதானா" - எஸ். ஜானகி.

"மலர்கள் நனைந்தன பனியாலே" -




மோகன ராகத்தில் மகாதேவன் அமைத்திருக்கும் இந்தப் பாடலின் அழகும் இனிமையும் வார்த்தைகளுக்கு அவர் கொடுத்திருக்கும் அழுத்தமும்... வருணிக்க வார்த்தைகளே இல்லை.

மோகன ராகத்தில் எத்தனையோ திரைப்படப் பாடல்கள் அமைந்திருந்தாலும் இந்தப் பாடல் முதலிடம் பெறும் முத்தான ஒரு பாடல்.

கதைப்படி மனைவி இறந்துவிட்டதால் அவள் நினைவாகவே வாழும் கதாநாயகனின் மனதுக்கு உற்சாகம் கொடுக்க அவனது முறைப்பெண்ணாக வரும் இரண்டாவது கதாநாயகி நடனமாடிப் பாடுவதாக ஒரு காட்சி.

அவள் ஆடிப்பாடும்போது அவளுடைய இடத்தில் கதாநாயகனின் மனக்கண் முன்னால் அவன் மனை[illegible] தோன்றுவதாக காட்சி விரியும்.

முறைப்பெண் பாடும்போது ஒரு ராகத்திலும், அவனது கற்பனை நாயகி பாடுவதாக அமையும்போது வேறு ஒரு ராகத்திலும் அமைத்து ஒரே பாடலில் இரு வேறு சூழ்நிலைகளையும் வேறுபடுத்திக் காட்டி இருக்கிறார் கே.வி.மகாதேவன்.

ராகம் மட்டும் என்று அல்ல. தாளக் கட்டும், இணைப்பிசையுமே மாறுபடும்.

"என்னதான் ரகசியமோ இதயத்திலே.." என்று துவங்கும் இந்தப் பாடல் காட்சியில் ஷீலா, கே.ஆர். விஜயா ஆகிய இருவருமே நடித்திருப்பார்கள். பி.சுசீலாதான் இருவருக்குமே பாடி இருப்பார்.

ஷீலா பாடுவதாக அமைந்த பல்லவியும், சரணங்களும் "காபி" ராகத்திலும், கே.ஆர். விஜயா பாடும் சரணங்கள்"திலங்" ராகத்திலும் முற்றிலும் மாறுபட்ட நடையில் அமைந்த பாடல் இது.


இப்படி எல்லாம் பாடல்கள் இருந்தாலும் படத்தின் பெயர் சொன்னாலே பளிச்சென்று செவிகளில் வந்து அலைமோதும் பாடல் "உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல" பாடல் தான்.

சுசீலாவின் தேன்குரலில் இனிமையாக ஒலிக்கும் இந்தப் பாடலின் இணைப்பிசையில் தான் சிதாரும், குழலும், வயலினும் தான் எவ்வளவு ரம்மியமாக தபேலாவுடன் இணைந்து மனத்தைக் கவர்கின்றன.!

படத்தில் பலமுறை இடம்பெறும் பாடல் இது. படம் முடிவதும் இந்தப் பாடலுடன் தான்.

ஆகமொத்தம் "இதயக் கமலத்தில்" இடம் பெற்ற பாடல்கள் அனைத்துமே இன்றளவும் வாடாமல் திரை இசை ரசிகர்களின் மனங்களை நிறைத்துக் கொண்டு மணம் வீசிக்கொண்டே இருப்பது மறுக்க முடியாத உண்மை.

(தொடரும்)





# சாக்கடல்

உலகிலேயே மிகவும் பள்ளமான பகுதி சாக்கடல் உள்ள பகுதியாகும். இஸ்ரேல், ஜோர்டான் நாடுகளின் எல்லையில் மத்தியதரைக் கடலோடு சேர்ந்திருக்கும் நீர்ப்பகுதிதான் சாக்கடல். பெயர்தான் கடலே தவிர, இது ஒரு பெரிய ஏரி. 67 கி.மீ. நீளம், 18 கி.மீ. அகலம் உடையது.

சாதாரண கடல் தண்ணீரைவிட 8.6 மடங்கு உப்பு இந்தச் சாக்கடல் தண்ணீரில் உள்ளது. அதனால் நீச்சல் அடிக்காமலேயே இந்தத் தண்ணீரில் மிதக்கலாம். படுத்துக் கொண்டே புத்தகம் படிக்கலாம்.

உப்பு அதிகமிருப்பதால் உயிரினங்களே இந்தக் கடலில் இருக்காது என்று நினைத்துவிடாதீர்கள்! ஹாலோ பற்றீரியம், ட்யூனாலைலா, ஹாலோபியம் போன்ற நுண் உயிரிகள் சூரிய ஒளியைப் பயன்படுத்தி தங்களுக்கான உணவைத் தயாரித்துக் கொள்கின்றன.

இந்தச் சாக்கடலிலிருந்து மக்னீசியம், பொட்டாசியம், புரோமைட்கள் போன்ற பொருட்களை எடுத்து உரத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்துகிறார்களாம்.



# இள நரையைப் போக்க...

☯ தூய்மையான தேங்காய் எண்ணெய்யில் உலர்ந்த நெல்லிக்காய்த் துண்டுகள், நசுக்கிய கடுக்காய் விதைகள், செம்பருத்திப் பூக்கள், கரிசாலங்கண்ணி, நீலி அவரை, பிச்சி இலை, தான்றிக்காய் லோக பஸ்பம் (இவை அனைத்தும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்) இவற்றைக் காய்ச்சி, அந்த எண்ணெய்யை வடிகட்டித் தலைக்குப் பயன்படுத்தினால் இளநரை மறையும்.

☯ கடுக்காய் விதையை நசுக்கி, தேங்காய் எண்ணெய்யில் கலந்து, அதன் சத்து முழுவதும் எண்ணெய்யில் இறங்கும் வரை காய்ச்சி இந்த எண்ணெய்யை தினமும் தடவி வந்தாலும் இளநரை அகலும். அதுபோல் கடுக்காய் காய்ச்சிய நீரைக் கொண்டு தலையை அலசினாலும் இளநரை மாறும்.

☯ மருதாணியை நன்கு அரைத்து, அதைத் தேங்காய் எண்ணெய்யுடன் காய்ச்சி, ஆறிய எண்ணெய் வாரம் ஒருமுறை அல்லது இரு முறை தலைக்கு தடவி அரைமணி நேரம் ஊற வைத்து தலை குளிக்க, இள நரை மாறும். மேலும் இது நரை முடிக்கான சாயம்போலவும் பயன்படும்.

☯ சிவப்பு நிற செம்பருத்திப் பூக்களை நிழலில் காய வைத்து, தேங்காய் எண்ணெய்யில் இட்டு காய்ச்சினால், சிவப்பு நிற எண்ணெய் கிடைக்கும். இதனை நரையை மறைக்கும் சாயமாகவும் பயன்படுத்தலாம்.

☯ கெட்டியான தேயிலை நீரினால் வாரம் இரண்டுமுறை தலையை அலசி வந்தால் முடி, கருஞ்சிவப்பாக மாறிவிடும்.

# தர்மம் தலைகாக்கும்

– பி.என்.பரசுராமன் –

"கொடுத்து வாழ்ந்தவன் கெட்டதும் இல்லை பிறருக்கு கொடுக்காமலே வாழ்ந்தவன் வாழ்ந்ததுமில்லை" என்பது கிராம[illegible] சொலவடை. தர்மம் என்பது நம் புண்ணியச் செயல்[illegible] எனும் உண்டியலில் சேமிக்கப்படும் பொற்காசுகள்.

கிஞ்சன்வாடி எனும் கிராமத்தில், கேசவதாசர் என்பவர் கதாகாலட்சேபம் செய்து வந்தார். அவருக்கு தட்சணை கொடுப்பதற்காக, கிருஷ்ண பக்தரான துக்காராம் ஏற்பாட்டின்படி, ஊர் பெரியவர்கள் வசூல் செய்தனர்.


அப்போது, மாதவன் என்ற வியாபாரியிடம் பொருள் கேட்டனர். அவரோ, "அட போங்க... எப்ப பார்த்தாலும் இந்த துக்காராம் பஜனை, கதாகாலட்சேபம் அது, இது என்று கத்திக்கொண்டே இருப்பார். இப்ப, அவருடன் கேசவதாசர் என்று இன்னொருத்தரும் சேர்ந்திருக்கிறார். நான் எதுவும் கொடுக்க மாட்டேன் போங்க..." என்று விரட்டினார்.

அத்துடன் நின்றுவிடாது, தன் மனைவி எதையாவது கொடுத்து விடுவாள் என நினைத்து, விலை உயர்ந்த பொருட்களை மறைத்து வைத்து விட்டார். அதன் காரணமாக, பொருள் கேட்டு வந்த அடியவர்களுக்கு கொடுப்பதற்கு எதுவும் இல்லாததால், வீடெங்கிலும் [illegible]டந்து போன ஒரு அலுமினியப் பாத்திரத்தை எடு[illegible]யா... இதை விற்று, அதன் மூலம் கிடைப்பதை, உங்கள்[illegible]ல காரியத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்..." என்றாள் மாதவனின் மனைவி.

அவர்களும் அப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சென்றனர்.

அதை கண்ட மாதவன், "அடடே...என் மனைவி தங்கப் பாத்திரத்தை தந்திருக்கிறாளே... கொண்டு போங்கள்..." என்று சிரித்துக் கொண்டே ஏளனமாக கூறினார்.

அடியவர்களிடம் இருந்து பாத்திரத்தை வாங்கிய துக்காராம், "தர்ம சிந்தனை கொண்ட அந்த உத்தமி தந்த இந்த அலுமினியப் பாத்திரம், தங்கப் பாத்திரத்திற்கு இணையானது..." என்றார். அதே வினாடியில், துக்காராம் கையில் இருந்த அலுமினியப் பாத்திரம், தங்கமாக மாறியது.



இந்தத் தகவல் ஊரெங்கும் பரவியது. வியாபாரி மாதவன் அதை கேள்விப்பட்டு ஓடோடி வந்தார். "இந்த ஊர்க்காரர்கள், என் மனைவியை ஏமாற்றி, தங்கப் பாத்திரத்தை வாங்கி வந்து விட்டனர் அதைத் திருப்பித் தாருங்கள்..." என்றார்.

துக்காராமும் அப்பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தார். அதை மாதவன் வாங்கியதும், பழையபடியே அலுமினியமாக மாறியது. எரிச்சலோடு அவர், அதை துக்காராமிடமே திருப்பிக் கொடுத்தார். இவர் கைக்கு வந்ததும் அது தங்கமாக மாறியது.

மாதவன் திகைக்க, "மாதவா... உத்தமியான உன் மனைவி, தர்ம சிந்தனையுடன் தந்த இந்த பாத்திரம் அவள் மனதைப் போலவே தங்கமாக மாறியது..." என்றவர், "மாதவா... நாம் சம்பாதிக்கும் செல்வத்திற்கு அரசு (வரி மற்றும் இதர அரசு காரியங்கள்), இயற்கை (பஞ்சம், வெள்ளம், காற்று, நெருப்பு ஆகியவைகளால் விளையும் சேதம்), திருடர்கள் (திருட்டு, மோசடி, நம்பிக்கை துரோகம் ஆகியவை மூலமாகவும்), தர்மம் (துன்பப்படுபவர்களுக்கு உதவுவது) இந்த நான்கு பேரும் பங்காளிகள்.

"இந்த நான்கிலும், நான்காவதாகச் சொல்லப்பட்ட தர்மத்தை நாம் செய்தால், அந்தப் புண்ணியத்தின் பலத்தால், மற்ற மூன்று பங்காளிகளும், நம்மை நெருங்க மாட்டார்கள் ஆகையால், இருக்கும் போதும், இறந்த பின்பும் நன்மை தரக்கூடியது தர்மம் மட்டுமே..." என்றார்.

"ஈயார் தேட்டை தீயார் கொள்வர்" என்று அவ்வையார் இடித்துரைப்பதை மனதில் வைத்து, தர்மம் செய்வது நம் வாழ்வியல் கடமைகளில் ஒன்று என்பதை நினைவில் வைப்போம்!

# மாவை தமிழரசுக் கட்சியின் தலைவரா அல்லது அதன் ஒரு பிரிவின் தலைவரா?


– கணேசவேல் –

தமிழரசுக் கட்சி வவுனியாவில் நடைபெற்ற மாநாட்டில் மாவை சேனாதிராசாவை, கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்தமை தெரிந்ததே. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கோஸ்டி மோதல்களுக்குப் புறம்பாக, தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் பல பிரிவுகளின் கோஸ்டிச் சண்டையில் மாவை சேனாதிராசாவை தலைவராக ஆக்குவதைத் தவிர அக்கட்சியினருக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஆனால் மாவை சேனாதிராசா தலைவராக நியமிக்கப்பட்டாலும், அவர் இந்தப் பதவிக்கு தகுதியானவர் இல்லை என்ற கருத்தே பொதுவாகவும், கட்சியின் சில பிரிவுகளுக்குள்ளும் நிலவி வருகின்றது. "இவரிலை வேலை இல்லை" என்ற வாசகத்தை மாவை பற்றிப் பொதுவாக கேட்க முடிகிறது.

மாவையின் தகுதிகளாக 1970 ஆண்டுகால சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட 42 தமிழ் இளைஞர்களில் ஒருவராக இருந்தது, மேடைகளில் வீராவேசமாக சொற்பொழிவு ஆற்றுவது என்பனவற்றைத் தவிர வேறொன்றையும் குறிப்பிட முடியாது என்பது பலரின் அபிப்பிராயமாக உள்ளதைக் காண முடிகிறது.

கட்சியின் முன்னைய தலைவரான இரா.சம்பந்தனிடம் இருந்த அரச பணி செய்த அனுபவம், மும்மொழி திறமை, வாதத்திறமை, பேட்டிகளின் போது சமயோசிதமாகப் பதில் சொல்லும் ஆற்றல், இராஜதந்திர நெளிவு சுளிவு எதுவும் மாவையிடம் இல்லை என்பது பொதுவான அபிப்பிராயமாக இருக்கின்றது.



அத்துடன் தமிழரசுத் தலைமை (புலிகளும் கூட) காலம் காலமாக கிழக்கு மாகாணத்தைப் புறக்கணித்து வந்த பாரம்பரியத்தின் அடிப்படையில், மாவை போன்ற யாழ்.மையவாத சிந்தனையுள்ளவர்களை கிழக்கு மாகாண மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியும் சில தரப்பினரிடம் இருக்கின்றது.

அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த போது, அவருக்கு அங்குள்ள கட்சியினர் போதிய வரவேற்புக் கொடுக்காது ஏனோ தானோ என்று இருந்ததிலிருந்து இது தெரியவந்துள்ளது.

அதனால்தானோ என்னவோ, தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாடு முடிந்த சில நாட்களில் இரா.சம்பந்தனின் திருகோணமலை வீட்டில் கூடிய கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கட்சியின் அரசியல் பிரிவு என்ற புதிய பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கு இரா.சம்பந்தன் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதன் மூலம் மாவையின் தலைவர் பதவி அர்த்தமற்றதாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மாவை கட்சியின் தலைவர் என்றால் அது அரசியல் தலைவர் தான். அப்படியிருக்க புதிதாக அரசியல் தலைவர் என்ற பதவி எதற்காக என்ற கேள்வி எழுகின்றது.

விடுதலைப் புலிகள் போன்ற முற்றுமுழுதான ஆயுதப் போராட்ட அமைப்பில் அரசியல் பிரிவு, கலாசாரப் பிரிவு, மகளிர் பிரிவு என பல பிரிவுகளுக்குத் தேவை இருந்தது. ஆனால் தமிழரசுக் கட்சி ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு அல்ல. அது ஒரு அரசியல் கட்சி. அதன் தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் அரசியல் தலைவர்தான். அப்படியிருக்க மாவையை விட்டுவிட்டு அரசியல் பிரிவு ஒன்றை உருவாக்கி அதற்கு இரா.சம்பந்தனை தலைவராக நியமித்திருப்பது, (சேனாதி)ராசாவுக்கு முடியை மட்டும் சூட்டிவிட்டு, அதிகாரங்களை உண்மையான சேனாதிபதியான சம்பந்தன் வைத்திருப்பது என்பதே அர்த்தம்.

மாவை இந்த உண்மையை உணரும் போது, சம்பந்தனின் பதவி இல்லாமல் செய்யப்படலாம் அல்லது கட்சிக்குள் பூகம்பம் வெடித்து பிளவு வரை செல்லலாம் என்பதே தற்போதைய நிலைமையாகும்.

(நன்றி: வானவில்-46)



வலிகாம வலய சாதனையாளர் கௌரவிப்பு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது பிரதம விருந்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கல விளக்கேற்றுவதையும், 2013 ஆம் ஆண்டில் சிறப்பாக செயற்பட்ட பாடசாலை அதிபர் கௌரவிக்கப்படுவதையும், வரவேற்பு நடனத்தையும் காணலாம்.

# விபத்தில் சிக்கவில்லை வாகனம் முதலமைச்சர் அலுவலகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபை முதலமைச்சரின் பாதுகாப்பு வாகனமும் லொறியும் மோதி ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

என கடந்த 28 ஆம் திகதி வெளியான செய்தி தவறானது என முதலமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சரின் செயலாளர் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடமாகாணசபை முதலமைச்சரின் எந்தவொரு வாகனமோ, பாதுகாப்பு வாகனமோ விபத்தில் சிக்கவில்லை இவ்விபத்து புத்தள மகாகொடயாய பகுதியில் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அப்பிரதேசத்துக்கு வடமாகாண முதலமைச்சரின் எந்தவொரு வாகனமும் அத்தினத்தில் செல்லவில்லை.

எனவே முதலமைச்சருக்கும் இந்த விபத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென தெரிவித்துள்ளது.

# உடுவில் பொது நூலகத்தின் வாசிப்புமாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் உடுவில் பொது நூலகங்கள் இணைந்து நடாத்திய "அறிவால் நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்" என்னும் கருப்பொருளிலான தேசிய வாசிப்பு மாதம் 2014 நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலிகாமம தெற்கு பிரதேசசபை செயலாளர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக்கற்கைகள் ஆங்கில மொழி கற்பித்தல் மையம் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலை உதவிப்பதிவாளர் முருகேசு சின்ராசா, வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி சிவலோஜினி வேலும் மயிலும், வலி.தெற்கு பிரதேசசபை உப தவிசாளர் இ.பர மேஸ்வரலிங்கம் வலி.தெற்கு பிரதேச சைப சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வ விநாயகர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (63)

# சுதந்திரமான ஊடக தன்மையை நாட்டில் வளர்க்க வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

சுதந்திரமான நடுநிலையான ஊடகத் தன்மை இந்த நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். தமிழ் அரசியலில் சரியான வழிகாட்டு தலை ஊடகங்கள் மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு மூத்த தமிழ் ஊடகவியலாளர் என்.வித்தியாதரனின் "என் எழுத்தாயுதம்" நூல் அறிமுகவிழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈழமக்க ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தொடர்ந்து உரையாற்றுகையில்,



தமிழ் ஊடகத்துறையில் தனக்கென ஒரு தடம் பதித்தவர் என்.வித்தியாதரன் ஷிமர்சனங்களை விமர்சனப் பார்வையுடன அணுகும் பண்பு மிக்கவர். அரசியலில் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தாலும் அனைத்து அரசியல் தலைவர்களையும் ஒரே மேடையில் அழைத்து வந்து அமர்த்தியுள்ளார்.

பத்திரிகைகள் வாயிலாக மக்களுக்கு உண்மைகளை எடுதது்ச் சொல்வதற்கு ஊடகவியலாளர்கள் தயங்கக்கூடாது. எந்த ஒரு விடயத்தையும் உண்மையாகவும், வெளிப்படையாகவும் எழுதவேண்டும். இன்று எமது ஊடகங்களில் இந்தப் பண்பு கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குறியே.

எத்தகைய தடை வந்தாலும் அதனை எதிர்கொண்டு உண்மையை வெளிப்படுத்துபவனே சிறந்த ஊடகவியலாளனாவான். தமிழ் ஊடகங்களில் ஜனநாயகப் பண்பு இருக்க வேண்டும். எல்லோருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கவேண்டும்.

தமிழ் மக்களைச் சுயமாகச் சிந்திக்க முடியாத சூழலை உருவாக்கி அவர்களைத் தவறான பாதையை நோக்கித் தள்ளிவிடும் அபாயகரமான நிலையை நோக்கியே இன்றைய தமிழ் ஊடகங்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

சுதந்திரன் பத்திரிகை வாசித்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டார்கள். எமது இனத்தின் பெரும் அழிவுக்கு ஊடகங்கள் உடந்தையாக இருந்துள்ளன. எனவே எதிர்காலத்தில் தமிழ் அரசியலில் சரியான வழிகாட்டுதலை ஊடகங்கள் உருவாக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தலைவரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான த.சித்தார்த்தன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா கவிஞர் சோ.பத்மநாதன் பத்திரிகை எழுத்தாளர்களான ஆ.யதீந்திரா, அ.நிக்ஸன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். நூலாசிரியர் என்.வித்தியாதரன் ஏற்புரை வழங்கினார். (10)

# பாடசாலை வளாகத்தை பயன்படுத்த முடியாது

(யாழ்.நிருபர்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதால் மேற்குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களும், இணைப்பு நிலையங்களும் உள்ள பாடசாலையையும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி வேறு எந்தச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தக் கூடாது என்று கல்வி அமைச்சின் செயலாளர் அனுரதிஸ நாயக்கா சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (10)

# முரசின் இன்றைய பலன்

(03.12.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 17 ஆம் திகதி.
மரணயோகம் / கரிநாள் / துவாதசி.
அஸ்வினி நட்சத்திரம் பின்னிரவு 12.27 வரை. பின் பரணி.
இராகு காலம 12.15 - 01.45 வரை. சுபநேரம 04.45 - 06.15 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — குடும்பத்தில் புரிந்துணர்வுடன் செயற்படுதல் அவசியம், பாதுக்காப்பில் கவனம் செலுத்தல்.

**ரிஷபம்** — குடும்ப சகிதம் ஆலயதரிசனத்திற்கு சென்றுவரல், தொழில் சிறக்க புதிய திட்டம் தீட்டுதல் சுவீப் அதிர்ஷ்டமுண்டு.

**மிதுனம்** — வரவிருந்த விபத்து புத்திசாதுரியத்தினால் விலகிவிடல், எச்சரிக்கையாக இருப்பது நன்று.

**கடகம்** — பிதாவின் அறிவுறுத்தலால் துயா விலகிவிடல், காலவாதியான பொருட்களால் களேபரம் ஏற்படல்.

**சிம்மம்** — காரிய சித்திபெறல், சுபச் செலவுகளைச் சமாளிக்க கடன்படுதல்.

**மீனம்** — வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டு மோசடிக்கு உட்பட வேணடாம், புதிய மனை அமைக்க பணம் வந்துசேரல்.

**கன்னி** — பேச்சுத்திறமை அதிகரித்தல், பிரச்சினைகள் சாதகமான முடிவிற்கு வருதல்.

**கும்பம்** — புதிய ஒப்பந்தத்தை ஏற்கமறுத்தல், விபத்து ஏற்படலாம்,

**மகரம்** — காரிய சித்திபெற நவக்கிரக வழிபாட்டில் ஈடுபடல், நிலுவைகள் கட்டாததால் தண்டம் கட்டல்.

**தனுசு** — நீண்ட நாட்களாக ஏமாற்றியவர்கள் அதிர்ஷ்டவசமாக சிக்குதல், தொலைபேசி மூலம் வரவேண்டிய பணத்தைப் பெறல்.

**விருச்சிகம்** — புதிதாக வாகனம் எடுக்கும் யோசனையைக் கைவிடல், மனதில் தேங்கியிருந்த துயர் விலகிவிடல்.

**துலாம்** — உறவினர் வருகையால் மகிழ்ச்சி ஏற்படல், மனதை ஒரு முகப்படுத்தி காரியத்தில் கண்ணாக இருங்கள்.


# சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மன்னாரில் விசேட சத்திரசிகிச்சைகள்

(மன்னார்)

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் விசேட சத்திர சிகிச்சைகள் இடம்பெற்றுள்ளன.

உதட்டுப் பிளவுகள், அண்ணப் பிளவுகள் மற்றும் முகத்தில் ஏற்படும் குறைபாடுகள் ஆகியவற்றிற்கான சத்திர சிகிச்சைகளே மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்றன.

மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரூபன் லெம்பேட் மற்றும் மன்னார் பிராந்திய பல் வைத்திய அதிகாரி சிறிதேவி வேதவனம் ஆகியோர் சுகாதார அமைச்சிற்கு முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாக குறித்த சத்திர சிகிச்சைகள் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம் பெற்றது.




மன்னார் மாவட்டத்தில் குறித்த குறைபாடுகளுடன் காணப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த குறைபாடுகளுடன் காணப்பட்ட 80 பேர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களுக்கு முதற்கட்டமாக குறித்த சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

குருநாகல் போதனா வைத்தியசாலை மற்றும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைகளைச் சேர்ந்த சுமார் 30 பேர் அடங்கிய வைத்திய குழுவினர் குறித்த சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

மேலும் குறித்த குறைபாடுகளுடன் உள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கும் குறித்த சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை மகாவித்தியாலயத்தில் இவ் வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை அதிபர், ஆசிரியர்களுடன் காணலாம். (90)

# உதவிச் செயலாளராக கிருஷ்ணேந்திரன் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவிச் செயலாளராக சி.கிருஷ்ணேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பொன்னாலையைச் சேர்ந்த இவர் இலங்கை நிர்வாக சேவையில் 2007 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார்.

திருகோணமலை கிண்ணியாவில் உதவிப் பிரதேச செயலராக முதல் நியமனம் பெற்ற இவர் கடந்த நான்கு வருடங்களாகப் பிரதேச செயலராகவும் கடமையாற்றியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக உதவிச் செயலாளராகக் கடமையாற்றிய ஜெயராணி பரமோதயன் கடந்த வருடம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகப் பதவியேற்றதினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே சி.கிருஷ்ணேந்திரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# ஜீப் - ஓட்டோ விபத்து

(சுன்னாகம்)

முழங்காவில் சந்தைக்கு முன்னுள்ள மன்னார் வீதியில் சிரியரக ஜீப்வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதி நேற்று முற்பகல் 10 மணிக்கு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப படுகின்றது.

தாண்டிக்குளத்திலிருந்து வந்த முச்சக்கர வண்டியும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான சிறியரக ஜீப் வாகனமும் முழங்காவில் சந்தைக்கு முன்னுள்ள மன்னார் வீதியில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதால் இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் அதில் பயணித்த எவருக்கும் சேதம் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (36)

# காலாவதிக்கு அண்மித்த மருந்துகள் விற்பனை

## விசனம் தெரிவிக்கும் நோயாளர்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் நகர்ப்பகுதியில் இயங்கும் மருந்துக்கடைகளில் நீண்டகாலம் இருப்பில் இருந்த மருந்து வகைகளே விற்பனை செய்யப்படுகின்றன.


குறிப்பாக இரண்டு வருடங்களுக்கு முன் உற்பத்தி திகதி இடப்பட்ட மருந்துப்பொருட்கள் விற்பனையாகின்றன.

அத்தகைய மருந்தக பொருட்களின் முடிவுத்திகதி முடிவதற்கு இன்னும் ஒருசில மாதங்கள் உள்ள நிலையில் விற்பனை செய்யப்படும் மருந்து வகைகளை நோயாளர்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிலையிலுள்ளதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நோயாளர்களின் நன்மைகருதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். (66)

# ஆயுர்வேதம்

## சிசேரியனைத் தடுக்க



குழந்தைகள் பிறப்பது என்பது இயற்கையான நிகழ்வு என்பது போய், கர்ப்பம் என்பது ஒரு வியாதி, உபாதை என்று கருதப்பட்டு நவீனமயமான மருத்துவமனைகளில்தான் பிரசவம் செய்விக்கப்பட வேண்டும் என்றாகி விட்டது.

சிசேரியன் முறை மூலம் குழந்தைகளை வெளியே எடுப்பது அபூர்வமாக இருந்ததுபோய் இன்று 98 சதவீதம் சிசேரியன் முறை செய்யப்பட வேண்டியுள்ளது.

கர்ப்பமுற்ற ஒரு பெண், உணவில் வெண்ணெய், நெய், பால் போன்றவற்றை முக்கியமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தும் கரு வளரும் கருப்பையில் ஆதிக்கம் செலுத்தக் கூடிய அபானன் எனும் வாயுவைச் சீற்றமடையாதவாறு பார்த்துக் கொள்கிறது.

அடி வயிற்றில் வாயுவினுடைய சீற்றம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதற்கு கர்ப்பிணிப் பெண் சில விஷயங்களைத் தவிர்க்கவேண்டும்.

அவை அதிக தேகப்பயிற்சி, சுமை தூக்குதல், உடலை கனமான துணியால் போர்த்திக்கொள்ளுதல், அகாலத்தில் கண் விழித்தல், தூங்குதல், கடினமான ஆசனங்களில் அமர்ந்திருத்தல், முழங்கால் மேல்நோக்கி வைத்துக் கொண்டு உட்கார்தல், வருத்தம், கோபம், பயம், மன அதிர்ச்சி போன்ற வேகங்களை அடக்குதல், ஆசையை அடக்குதல், பட்டினி, வழிநடத்தல், ஊடுருவும் தன்மை, சூடான வீரியம் கொண்டவை, எளிதில் செரிக்காதவை, வயிற்றில் வாயுவை ஏற்படுத்துபவை ஆகிய குணமுள்ள உணவுகளை உட்கொள்ளுதல், சிவப்பு ஆடை தரித்தல், பள்ளம், கிணறு ஆகியவற்றைப் பார்த்தல், மது, மாமிசம், மல்லாந்து படுத்தல் ஆகியவற்றை சுகப்பிரசவத்தை உத்தேசித்து கர்ப்பிணிப்பெண் தவிர்க்க வேண்டும்.

சுகமான பிரசவத்திற்கு கர்ப்பிணிகள் எட்டாம் மாதத்தில் பால் சேர்த்து தயாரிக்கப்பட்ட புழுங்கலரிசிக் கஞ்சியை நெய் சேர்த்து பருக வேண்டும்.

அவ்வாறே குடலில் வாயு சேராதிருக்கவும், பழைய மலத்தைப் போக்குவதற்காகவும் காய்ந்த முள்ளங்கி, புளிப்பு இலந்தை இவற்றின் கஷாயத்தில் சதகுப்பை கல்கமும், தைலம், நெய், இந்துப்பு இவற்றையும் கலந்து எனிமா செய்வது நம் முன்னோர் முறை.

ஒன்பதாவது மாதத்தில் எண்ணெய்ப் பசையை தருவதும், மாமிச சூப் கலந்ததுமான உணவு ஏற்றதாகும்.

முன் குறிப்பிட்ட எனிமாவிற்குரிய மருந்துகளை ஒன்பதாவது மாதத்திலும் எனிமாவாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாகும். இதே எனிமா தைலத்தில் நனைத்த பஞ்சுத்துண்டை கர்ப்பிணியின் பிறப்புறுப்பில் எப்போதும் வைக்கவேண்டும். இது வாயுவை நன்னிலையில் வைக்க உதவும்.

மேலும் வாயுவைப் போக்கும், வாயுவைக் கட்டுப்படுத்தும் சில மூலிகை இலைகளாகிய ஆமணக்கு, புங்கை, நொச்சி, வாதநாராயணன், கல்யாணமுருங்கை, யூகலிப்டஸ் போன்றவற்றை சிறுதுண்டுகளாக நறுக்கி தண்ணீரில் கொதிக்கவிட வேண்டும். ஆறிய பின் இதை தினந்தோறும் கர்ப்பிணி குளிக்க இதமானது.

சுகப்பிரசவத்திற்கு ஒன்பதாம் மாதம் தொடங்கி பிரசவிக்கும்வரை உடலில் நெய்ப்புப் பொருள் இன்றி இருக்கச் செய்யக்கூடாது. அதற்கு ஆயுர்வேத மூலிகைத் தைலமாகிய தான்வந்திரம் தைலத்தை வெதுவெதுப்பாக உடலெங்கும் தேய்த்து மேற்குறிப்பிட்ட மூலிகை இலைத் தண்ணீரால் குளிப்பது பிரசவத்தின்பொழுது குழந்தை சுலபமாக வெளியே வருவதற்கு ஏதுவாக இருக்கும்.

கர்ப்பநீர் கசிய ஆரம்பித்தலும், அக்காலத்தில் கர்ப்பிணிக்குச் செய்யவேண்டிய உபகாரங்களில் உடலில் வெதுவெதுப்பாக எண்ணெய்யைத் தேய்த்து வெந்நீர் ஸ்நானம் செய்வித்து அதன் பின்னர் நெய் சேர்த்த கஞ்சியை சாப்பிடச் செய்வதால் சுகப்பிரசவத்திற்கு பேருதவியாக இருக்கும்.

தொப்புளுக்குக் கீழே உள்ள அங்கங்களை மட்டும் பிடித்துவிடவேண்டும். வாயு கோபமடையாமல் இருக்க பன்முறை நெய்ப்புப்பொருளும் தடவவேண்டும். இவ்வாறு செய்வதால் கர்ப்பம் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்கிறது.

இவை அனைத்தும் மிருதுவான தரை விரிப்பில் படுத்திருக்கும் கர்ப்பிணியின் உடலில் செய்ய வேண்டியவை. பிரசவ வலி அதிகரித்தபின் கர்ப்பிணியை கட்டிலில் ஏறி படுக்கச் செய்ய வேண்டும். மருத்துவரை அணுக வேண்டும்.

# ஆட்சியிலுள்ள அரசில் குறைகள்; இல்லையென மறுக்கமாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஆட்சியிலுள்ள அரசில் குறைகள் எதுவும் இல்லை என நான் குறிப்பிடவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார் கொழும்பில் சிறிசந்த செவன வீடமைப்புத் திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். -

. இலங்கையில் வாழ்ந்து வந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள், கப்பம் பெற்றுக்கொள்ளும் நபர்கள் தற்போது வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

ஊடகவியலாளர்களில் 70 வீதமானவர்கள் அரசிற்கு விரோதமான வகையிலேயேதகவல்களை வெளியிடுகின்றனர். நீதிமன்றின் நடவடிக்கைகளுக்கு எல்லா சந்தர்ப்பத்திலும் தலை வணங்குகின்றேன். இந்த அரசு குறைபாடுகள் இல்லாமல் இல்லை. போதைப் பொருள் காணப்படுகின்றது அவற்றை நாம் பிடிக்கின்றோம்.

இவற்றை பத்திரிகைகளில் பிரசுரித்து நாட்டில் போதைப் பொருள் இருப்பதாக பிரசாரம் செய்கிகின்றனர். கண்களை மூடிக் கொண்டிருந்தால் ஒன்றுமில்லை. பிடிப்பதனால் தான் போதைப்பொருள் இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என தராதரம் பாராது நாம் அனைவரையும் நீதிமன்றின் முன் நிறுத்தினோம். குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் நீதிமன்றம் தண்டனை விதிக்கும். நான் சட்டத்தரணி என்ற காரணத்தினால் நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்துள்ளேன்.

அரசிற்கு எதிரான ஊடகவியலாளர் நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் கருத்துக்களை வெளியிட எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இதனால் அனைவரும் சுதந்திரமாக செயற்பட வழியமைந்துள்ளது என- அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கல்வி அமைச்சர் தலைமையில் பாடப்புத்தகங்கள் விநியோகம்



எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் தேசிய வைபவம் கல்வி அமைச்சர் பந்துல குண்வர்தன தலைமையில் காலி சங்கமித்தா மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

2015 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் தேசிய வைபவம் நேற்று முன்தினம் கல்வி அமைசசர் பந்துல குணவர்தன தலைமையில் காலி சங்கமித்தா மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

2014 ஆம் ஆண்டுக்கான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல 37.6 மில்லியன் புத்தகங்கள் அச்சிடப்பட்டு, நாடு முழுவதிலுமுள்ள சுமார் 42 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக 2, 700 மில்லியன் ரூபா நிதி அரசாங்கத்தினால் செலவிடப்பட்டுமுள்ளது.

இம் முறை தரம் 6 மற்றும் தரம் 10 மாணவர்களுக்காக புதிய பாடத்திட்டத்தின் கீழ் அச்சிடப்பட்ட பாடப்

புத்தகங்களை . மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அவ் வறிக்கையில் - மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பெரிய வெங்காயத்திற்கு இறக்குமதி வரி அதிகரிப்பு



(கொழும்பு)

இறக்குமதி செய்யப் படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோவுக்கான இறக்குமதி தீர்வை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உடன் அமுலுக்கு வரும் வகையில் 35 ரூபாவாக இருந்த பெரிய வெங்காய இறக்குமதி வரி 50 ரூபாவாக உயர்த் தப்பட்டுள்ளதென நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.


# நத்தாரை முன்னிட்டு முத்திரை வெளியீடு

2014 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையை முன்னிட்டு இரண்டு வகையான அஞ்சல் முத்திரைகளும், அஞ்சல் உறைகளும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்றுமுன் தினம் நீர்கொழும்பு புனித மேரி தேவால யத்தில் இடம்பெற்றது. தலா 10 ரூபாய் பெறுமதி யைக் கொண்ட குறித்த இரண்டு அஞ்சல முத்திரைகளின் முதல் தொகுதிகளை அஞ்சல் சேவைகள அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினாலிடம் கையளித்தார்.

இலங்கை அஞ்சல் சேவை, மற்றும் கிறிஸ்தவ மத விவகார திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து இந்த நிகழ்வை நடாத்தியிருந்தன.

# உயர்தர பெறுபேறு இம்மாத இறுதியில்




கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது விடைத்தாள் திருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்என்.ஜே புஷ்பகுமார குறிப்பிட்டார்.

விடைத்தாள்களின் புள்ளிகளை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுவதாக அவர் கூறினார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 09 ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கப்பட்ட போக்குவரத்துப்படி

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்ற 2011 ஆம் ஆண்டிலிருந்து பிரதேச சபைத் தவிசாளருக்கு 10 ஆயிரம் ரூபாவும், உபதவிசாளருக்கு 7500 ரூபாவும், ஏனைய உறுப்பினர்களுக்கு 5000 ரூபாவும் மாதாந்தப் போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்டு வந்தது.

தற்பொழுது பிரதேச சபை உறுப்பினர்களின் போக்குவரத்துப் படிகள் அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்டதை அடுத்து தவிசாளருக்கு 25,000 ரூபாவும், உபதவிசாளருக்கு 20,000 ரூபாவும், ஏனைய உறுப்பினர்களுக்குப் 15,000 ரூபாவும் போக்குவரத்துப் படியாக வழங்கப்பட்டுள்ளது.

# மைத்திரிக்கு ஆதரவு ஹெலஉறுமய அறிவிப்பு




ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறப்பினர் பாட்டலீ சம்பிக்க ரணவக்க நேற்று தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளது. இதற்கமைய, மைத்திரிபால சிறிசேன மற்றும் எமது கட்சித் தலைவர் ஓமல்பே சோபித்த தேரருக்கு இடையிலான தேசிய கொள்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தேசிய கொள்கைகளுக்கு அமைய, மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதில் முக்கியமாக 100 நாட்களுக்குள் அவரை நிர்வாகத்திற்கு தெரிவுசெய்து, ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பி, சட்டவாட்சியை மீளகட்டியெழுப்பி, நல்லாட்சியை ஏற்படுத்தும் பல விடயங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# இலங்கை செல்லும் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ள பிரிட்டன்



இலங்கையில் எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலைக் கருத்தில் கொண்டு, பிரித்தானிய அரசாங்கம பயண எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் வெளியிட்டுள்ள புதிய பயண எச்சரிக்கையில், இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால், எந்தவொரு அரசியல் கூட்டங்கள், பேரணிகளையும், பிரித்தானியர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் பேரணிகளிலும், தேர்தல் பரப்புரைகளிலும், காலத்துக்குக் காலம் வன்முறைகள் இடம்பெறுவதுண்டு என்றும், அங்கு, தீவிரவாத அச்சுறுத்தலும் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டவர்கள் கூடும் இடங்களில் கண்மூடித்தனமான தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என்றும் பிரித்தானியா எச்சரித்துள்ளது.

அளுத்கம வன்முறைகளை சுட்டிக்காட்டியுள்ள இந்த அறிக்கை, நாட்டின் பிற பகுதிகளிலும், கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் இலக்கு வைக்கப்படும் ஆபத்து இருப்பதால், பிரித்தானியர்கள், மிக கவனமாகவும், போராட்டங்களில் இருந்து விலகியும் இருக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

வடக்கிற்குப் பயணம் செய்வதற்கு வெளிநாட்டுக் கடவுச் சீட்டைக் கொண்டிருப்போருக்கு விதிக்கப்பட்டுள்ள இராணுவக் கட்டுப்பாடு குறித்தும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சின் முன் அனுமதியை பெற்றே வடக்கிற்குச் செல்லுமாறும், இலங்கையில் படையினர் உள்ள பகுதிகளை தவிர்த்துக் கொள்ளுமாறும், இந்த அறிக்கையில், கோரப்பட்டுள்ளது.

இலங்கையில நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம், எந்தக் குற்றச் சாட்டோ, நீதி விசாரணையோ இன்றி நீண்ட காலத்துக்கு தடுத்து வைக்கும் அதிகாரத்தை வழங்கி யுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மைத்திரியின் அரசியல் சாசனத்தை உருவாக்கும் பணியில் சரத்என் சில்வா?

மைத்திரிபாலவின் அரசியல் சாசனத்தை உருவாக்கும் பணிகளில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேனவின் சார்பில், நேரடியாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள பலர் இருக்கின்றார்கள் எனவும் அதனால் பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


சட்டம் மற்றும் அரசியல் சாசன வரைவுத் திட்டங்களை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக வெற்றியீட்டுவார் என சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

32. பிழையான கருத்து இடம்பெறும் விடையை தெரிந்து கோடிடுக
1) சூரியகிரகணம் அமாவாசை நாளில் ஏற்படும்
2) உடும்பு குட்டியீன்று இனப்பெருக்கம்
3) ஒலிம்பிக்விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும்

33. ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வரையுள்ள நாட்களின் நடுவில் வரும் திகதி யாது?
1) ஜனவரி 25ஆம் திகதி   2) ஜனவரி 18 ஆம் திகதி   3) ஜனவரி 22 ஆம் திகதி

34. நாளை மறுநாள் எனது பிறந்ததினம் என வாமதி நேற்றைக்கு முதல் நாள் என்னிடம் கூறினாள்• அதன்படி அவனது பிறந்ததினம்?
1) நேற்று   2) இன்று   3) நாளை

35. 
உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 4   2) 5   3) 6

36. எங்கள் ஊரில் உள்ள முதியவர் ஒருவர் நடக்க இருக்கும் விடயங்களை முன்னரே கூறி எங்களை வியப்பில் ஆழ்த்திவிட்டார். ஆவரைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் வருவதுண்டு அந்த முதியவரை குறிக்கக்கூடிய சொல் எது?
1) அட்டவதானி   2) சகபாடி   3) தீர்க்கதரிசி

37. 300 இன் $\frac{1}{3}$ உடன் 200இன் $\frac{1}{4}$ ஐ கூட்டினால் கிடைக்கும் விடை யாது?
1) 150   2) 200   3) 275

38. இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக
கிராமிய பாடல்கள் படித்தவர்களுக்கு மட்டுமன்றி ........................மக்களுக்கும் இன்பம் தருபவையாகும்
1) கிராம   2) பாமர   3) வறிய

39. மு.ப 3.30 க்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட ஆகாயவிமானம் ஒன்று அன்றைய தினமே சிங்கப்பூர் நேரம் மு.ப. 7.30 மணிக்கு சிங்கப்பூரைச் சென்றடைந்தது கொழும்பு நேரம் மு.ப 6 மணியாகும் போது சிங்கப்பூர் நேரம் மு.ப 7.00 மணியாகும் விமானம் பயணத்துக்கு எடுத்த நேரம் யாது?

40. மூன்று வாகனங்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு 80km தூரத்தில் உள்ள B நகரத்தை அடைந்தன. அவை புறப்பட்ட நேரங்களும் மணித்தியாலயத்திற்கு மாறா வேகத்தில் சென்ற தூரமும் கீழ் தரப்பட்டுள்ளது

| வாகனம் | புறப்பட்டநேரம் | வேகம்:மணிக்கு Km |
|---|---|---|
| மோட்டார் கார் | மு.ப 7மணி | 80km |
| மோட்டார் சைக்கிள் | மு.ப. 6மணி | 40km |
| பேருந்து | மு.ப.7மணி | 60km |

அவை B நகரை அடைந்த ஒழுங்கு முறையை காட்டும் விடையை தெரிவு செய்க
1.மோட்டார் கார், பேருந்து மோட்டார் சைக்கிள்
2.மோட்டார் சைக்கிள் மோட்டார் கார் பேருந்து
3.மோட்டார் கார் மோட்டார் சைக்கிள் பேருந்து

❖ தரப்பட்ட கருத்துக்கு பொருத்தமான பழமொழியை தெரிந்து கோடிடுக

41. கிடைக்காத ஒன்றுக்கு ஆசைப்படுவதில் பயனில்லை
1.எட்டாத கனிக்கு கொட்டாவி விடாதே
2. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
3. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு




01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம்



இக் கூட்டங்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க
1) A,D / B,C   2) A,B / C,D   3) A,C / D,B

02. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாக பிரிக்கலாம் அவற்றின் சரியான விடையை தெரிவு செய்க



1) A.C / B.F / E.D   2) A.D / C.B / E.F   3) B.C / D.F / E.A

❖ 3ஆம் ,4 ஆம் வினாக்களில் வெற்றிடங்களுக்கு நன்கு பொருந்தக்கூடிய சொல்லின் கீழ் கோடிடுக

03......A ....... உள்ள குகை ஓவியங்கள் ........B. ......மன்னனால் ......C .........
1) A - எம்பக்கவில   B - மகாசேன   C - கட்டப்பட்டவை
2) B - சிகிரியாவில்   B -காசியப்ப   C - வரையப்பட்டவை
3) C - சிகிரியாவில்   B - தாதுசேன   C - செதுக்கப்பட்டவை

04......A......உள்ள யானைகள் ......B.... யானைகள் குறிப்பதை ......C........
1) A - வில்பத்தில்   B - மிருககாட்சிசாலையில்   C- பார்வையிட்டோம்
2) A - குமணவில்   B -சரணாலயத்தில்   C - பார்வையிட்டோம்
3) A - பின்னவலயில்   B -சரணாலயத்தில்   C -பார்வையிட்டோம்


❖ கீழ்வரும் வினாக்களுக்க பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

05.நான் மேற்றுத்திசை நோக்கிச் செல்லுகின்ற போது எனது இடதுகை பக்கத்தில் உள்ள திசை யாது?
1) தெற்கு   2) வடக்கு   3) கிழக்கு

06. 6 X 0 = 3 ☐ 3 இக்கனித செய்கையில் உள்ள ☐ இடத்தில் வரவேண்டிய கணித குறியீடானது?
1) கூட்டல்   2) கழித்தல்   3) வகுத்தல்

07 .இரவு நிலா வெளிச்சத்தில் வானவெளியில் பறவை ஒன்று பறந்து செல்வதை நரேன் கண்டான். அவன் கண்ட பறவை
1) கிளி   2) புறா   3) வெளவால்

❖ 8ஆம், 9ஆம் வினாக்களுக்கு அடைப்பில் உள்ள தகவல்களை பயன்படுத்தி விடையை தெரிவு செய்க




08.  இவ்வுரு கொள்ளும் திரவத்தின் அளவு யாது?

1) 200ml 2) 150ml 3) 100ml


09.  இதற்கு சமம்?

1) 1000ml 2) 1100ml 3) 1200ml

10. மூன்று செவ்வகங்களினாலும் இரண்டு முக்கோணங்களினாலும் அமைக்கப்பட்ட திண்மவடிவம்யாது?
1) சதுரமுகி 2) கூம்பகம் 3) அரியம்

11. விதுஷா ஒரு எண்ணை எட்டால் பெருக்கவேண்டியதற்கு பதிலாக ஒன்பதால் பெருக்கி விடை 81 எனக் கூறினாள். அவ் எண்ணை எட்டால் பெருக்கினால் வரும் விடை யாது?
1) 63 2) 90 3) 72

12. wp NA 1857 வாகனத்தகட்டு இலக்கம் ஒன்று அருகில் தரப்பட்டுள்ளது இவ்வாகனத்திற்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் யாது?
1) பெற்றோல் 2) டீசல் 3) மண்ணெண்ணெய்

13.  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி யாது?
1) $\frac{1}{7}$ 2) $\frac{1}{12}$ 3) $\frac{1}{16}$

14. எட்டு சிறுவர்கள் செய்யும் வேலையை ஆறு பெண்கள் செய்வார்கள். 12 பெண்கள் செய்யும் வேலையை 8 ஆண்கள் செய்வார்கள் எனின், ஒரு ஆண் செய்யும் வேலையை எத்தனை சிறுவர்கள் செய்வார்கள்?
1) 2 2) 4 3) 5


ஓவியா நேற்று நீல நிறச்சட்டை அணிந்தமையினால் நாளை மஞ்சள் நிறச்சட்டை அணிவாள். நாளைமறுநாள் வியாழக்கிழமை பச்சை நிறச்சட்டை அணிவாள். நேற்றைக்கு முதல் நாள் வெள்ளை நிறச்சட்டை அணிந்தமையினால் இன்று சிவப்பு நிறச்சட்டை அணிவாள்.




15. ஓவியா வெள்ளை நிறச்சட்டை அணிந்த நாள் எது?
1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை

16. ஓவியா நீலநிறச்சட்டை அணிந்தது 25ஆம் திகதி எனின் பச்சைநிறச்சட்டை அணிந்தது எத்தனையாம் திகதி ஆகும்?
1) 28ஆம் திகதி 2) 26ஆம் திகதி 3) 27ஆம் திகதி

17. ஓவியா திங்கட்கிழமை அணிந்த சட்டையின் நிறம் யாது?
1) நீலநிறம் 2) சிவப்புநிறம் 3) மஞ்சள்நிறம்


❖ கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிந்து கோடிடுக




18.  இவ்விரு உருக்களையும் இணைப்பதால் தோன்றும் வடிவம்


1)  2)  3) 



19. மழை பெய்யும் போது இடி முழக்கம் ஏற்படும் இது
1) பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்
2) இது எப்போதும் நடைபெறும் நிகழ்வாகும்
3) இது ஒரு போதும் நடைபெறுவதில்லை

20.  போத்தல் ஒன்றில் உள்ள நீரின் அளவு முதல் உருவில் காட்டப்பட்டுள்ளது இப்போத்தலை கிடையாக வைக்கும் போது தோன்றும் விடையை தெரிக

1)  2)  3) 

21. 

ஒரேயளவான இரண்டு சதுரங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டப்பட்ட அமைப்பு காட்டப்பட்டுள்ளது. சதுரத்தின் ஒரு பக்கநீளம் 8cm எனின் உருவின் சுற்றளவு யாது?
1) 50 cm 2) 58 cm 3) 64 cm

22. மிதுலா தனதுதாயைவிட 26 வருடங்கள், இளையவள். மிதுலாவின் தந்தையை விடதாய் 5 வருடங்கள் இளையவர் மிதுலாவின் தந்தையின் வயது 52 எனின் மிதுலாவின் வயது யாது?
1) 18 வயது 2) 23 வயது 3) 21 வயது

23. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக்காட்டி எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்த போதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார். இம்மனிதன் யாருடைய படத்தை காட்டினான்
1) தனது 2) தனது தந்தையின் 3) தனது மகனின்

24. அமுதம், அரசன், அரவம் என்னும் சொற்கள் குறியீட்டு வடிவில் MPSA MPVH MDIH என எழுதப்பட்டுள்ளன. இதில் அரவம் என்பதை குறிக்கும் குறியீடு யாது?
1) MPSA 2) MPVH 3) MDIH

25. மார்ச்மாதம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் மார்ச்மாதம் முதலாம் திகதி என்ன கிழமை?
1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

நரேன் ஒரு ஆண்பிள்ளை நரேனின் தங்கை சுவேதா சுவேதவிற்கு இரண்டு பெண் சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் உள்ளனர்.

26. நரேனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
1) 2 பேர் 2) 3 பேர் 3) ஒருவர்

27. நரேனின் தந்தைக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?
1) 4 பேர் 2) 6 பேர் 3) 5 பேர்

❖ 28 தொடக்கம் 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை தெரிந்து கோடிடுக

நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தை கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக .....1.....இசைவகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்கு தவறாமல் சென்று வயலின் .........2... நன்றாக கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும்.....3.... அடைந்தனர்

28. முதலாவது இடைவெளிக்கு பொருத்தமான சொல் எது?
1) பயிற்சியளிப்பதற்கு 2) உற்சாகப்படுத்துவதற்கு 3) வழிப்படுத்துவதற்கு

29. இரண்டாவது இடைவெளிக்கு பொருத்தமான சொல் யாது?
1) பாட 2) வாசிக்க 3) அடிக்க

30. மூன்றாவது இடைவெளிக்கு பொருத்தமான சொல் யாது?
1) மகிழ்ச்சி 2) இரக்கம் 3) வேதனை

31. வியாபார நிலையம் ஒன்றில் வார நாட்களில் திறக்கப்படும் என அறிவித்தல் போடப்பட்டிருந்தது. [illegible] இதன் கருத்து யாதெனின்
1) வாரத்தில் ஏழு நாட்களும் திறக்கப்படும்
2) திங்கள் முதல் வெள்ளி வரை திறக்கப்படும்
3) சனி, ஞாயிறு நாட்களில் திறக்கப்படும்



அல்வாய் பாரதிதாஸன் சனசமூக நிலைய பொன்விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினரான வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றுவதையும் வைத்திய சிரோன்மணி எஸ்.வேலும் மயிலும் தம்பதிகள் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (01)

# வலி.தென்மேற்கு பிரதேசங்களில் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கை

(வலிகாமம்)

வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன எல்லைக்குள் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

படையெடுக்கும் பார்த்தீனியத்திற்கு விடைகொடுப்போம் என்னும் தொனிப்பொருளில் பார்த்தீனிய ஒழிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கட்டுப்பாட்டிலிருந்த பார்த்தீனியம் பெய்துவரும் கன மழை காரணமாக மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்தே இந் நடவடிக்கைகள் வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு அங்கமாக பெரிய விளான் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் பண்டத்தரிப்பு, பெரிய விளான் அந்தோனியார் ஆலய வளாகம் மற்றும் வீதிப்பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்த்தீனியம் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.செந்தில்குமரன் பிரதேச இளைஞர் கழக சம்மேளன உபதலைவர் எஸ்.றொபின்ஷன், பொருளாளர் அ.ஜெபநேசன், பெரிய விளான் இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளை பெற்றுக்கொடுப்பதே முக்கியம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு

இயற்கையின் தாண்டவத்தால் பாதிப்புற்றுள்ள ஏழை மக்களின் அன்றாட வாழ்வியலை வைத்து அரசியல் பிழைப்பு நடத்துவதை எமது கட்சி ஒரு போதும் விரும்புவதில்லை. தற்போது மக்களுக்கு உடனடியாக எது தேவைப்படுகின்றதோ அதை பெற்றுக்கொடுக்கவே அமைசசர் டக்ளஸ் தேவானந்தா செயற்பட்டு வருகின்றார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.



கன மழையால் பாதிப்புற்றுள்ள வலி. வடக்கு பகுதி மக்களையும் அப்பிரதேச நிலவரங்களையும் நேரில் சென்று பார்வையிடட யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் அந்த மக்களது தேவைகளை கேட்டறிந்த பின்னர் மக்களுடன் உரையாடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

உங்களது பிரச்சினைகள் அனைத்தும் அமைச்சரது பார்வைக்கு கொண்டு சென்று உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு தருகின்றேன். உங்களது நிலைமைகளையும் இருப்பிடங்களையும் பார்க்கும்போது வேதனையாக உள்ளது. இயற்கையின் பிடியில் தற்போது நீங்கள் சிக்கியுள்ளீர்கள்.

இது தற்காலிகமான ஒரு நிலைமைதான். உங்களது எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் அமைச்சர் பெற்றுத்தருவார் -

தொடரும் கனமழை காரணமாக யாழ்குடாநாடெங்கும் வெள்ளக்காடாய் காட்சியளிக்கிறது. வறியமக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர்.

மக்களது தேவைகளை அறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய குடாநாட்டின் அனைத்து பகுதிகளிலும் உதவிப்பணிகளை அப்பகுதிகளின் அமைப்பாளர்களூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன என்றார்.

# கிராமிய குடிநீர் விநியோகத்திற்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை திக்கம் மத்திய சனசமூகநிலையம், முன்பள்ளி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் கிராமிய குடிநீர் விநியோகத்திற்கும் ஆளுநர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கித் தருமாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரியுள்ளது இக்கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது முன்பள்ளி யாழ்மாவட்டத்தில் சிறந்த முன்பள்ளியாக 70 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இங்குள்ள விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்து பாவிக்க முடியாத நிலையில் இருக்கின்றன.

இதனால் இம்முன்பள்ளி மாணவர்கள் பலத்த பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். எனவே இம் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கித் தரவேண்டும்.

அத்தோடு எமது சனசமூக நிலையப்பிரதேசத்தில் உள்ள குழாய்க்கிணற்றில் சுமார் 1300 குடும்பங்கள் குடிநீரைப் பெற்று வருகின்றனர். இக் குழாய்க் கிணற்று நீரில் கல்சியச்சேர்க்கை உண்டென வைத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இந்நீரினால் சிலருக்கு சிறுநீர் சம்மந்தமான நோய்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் எமது சனசமூகநிலையம் பாதுகாப்பான சுத்தமான குடிநீரை மக்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது.

இதற்கான குடிநீர் வடிகட்டி இயந்திரம் பெறப்படவேண்டியுள்ளது இவ் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கும் 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கித்தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். (01)

# சுகாதார வார ஆரம்ப நிகழ்வு

சுகாதார வாரத்தை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் டி.ஒஸ்மன் சாள்ஸ்.தலைமையில் மன்னார் சிலாவத்துறை முஸ்லிம் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் முசலி பிரதேச செயலாளர், பல்வைத்திய அதிகாரி யோகேஸ்வரா. பொதுச் சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சுகாதார அலுவலக உத்தியோகத் தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வலிகாமம் பகுதியிலும் வெள்ளப்பாதிப்பு

(வலிகாமம்)

குடாநாட்டில் தற்போது பெய்து வரும் கன மழையினால் வலிகாமம் பகுதியில் தாழ் நிலப் பிரதேசங்களிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள நிலையில் இம் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி அட்டகிரி, இடிகுண்டு, மற்றும் நவாலி அரசடிப் பகுதிகளிலேயே வெள்ள நீர் தேங்கி காணப்படுவதாகவும் இப்பகுதிகளிலுள்ள சில வீடுகளிலும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறுவெள்ளஅனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. (66)

# சிறுவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது முற்றாக தடை செய்யப்படவேண்டும்

## பேராசிரியர் சூசையானந்தன் தெரிவிப்பு

சிறுவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது சட்டபூர்வமாக தடுக்கப்பட வேண்டும் என யாழ். பல்கலைக் கழக புவியியல் துறை பேராசிரியர் ஏ.எஸ்.சூசை ஆனந்தன் தெரிவித்தார்.

சிறுவர் தொழிலாளர்கள் பற்றி கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சிறுவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். கடற்றொழில் மிகவும் கடினமான ஒரு தொழில். சிறுவர்கள் கல்வி கற பதற்கான முழு ஏற்பாடுகளையும் மீனவ சங்கங்கள், பாடசாலைகள், கோவில்கள், பெற்றோர் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியும்வரையாவது கல்வி கற்பிக்க வேண்டும்.

சிறுவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுவது இல்லை. ஆனாலும் இலங்கையில் மீன்பிடி சார்ந்த சிறிய சிறிய வேலைகளையே செய்கிறார்கள் என்று கூறலாம்.

சிறிய அளவில் மேற்கொள்ளும் அந்த வேலைகளையும் அவர்களது 15 வயது வரை மேற்கொள்ள விடக்கூடாது. சிறுவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்கின்றமை தொடர்பில் தெளிவான சட்டம் எதுவும் இலங்கை யாப்பில் இல்லை.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்படும் இந்திய மீனவர்களில், சிறுவர்களும் உள்ளடங்குவது கவலை தருவதாகவுள்ளது. இதற்கு இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அந்தச் சிறுவர்களுக்கு கட்டாயக்கல்வி வழங்கப்பட வேண்டும். கடினமான மீன்பிடி வேலையில் இந்திய சிறுவர்களை ஈடுபடுத்தக்கூடாது.

இந்தச் செயற்பாட்டுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# படிம எரிபொருட்களில் அதிக முதலீடு ஆபத்தானது

## எச்சரிக்கிறது ஐ.நா. சபை

குறைந்து வரும் கச்சா எண்ணெயின் விலை, படிம எரிபொருளில் செய்யப்படும் அதிக முதலீடு ஆபத்தானது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது என ஐ.நா. கூறியுள்ளது. லிமாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலநிலை மாற்றம் குறித்த கூட்டத்தில் பேசிய ஐ.நா அமைப்பின் காலநிலை மாற்ற தலைமை அதிகாரி கிறிஸ்டியானா இவ்வாறு எச்சரித்துள்ளார். புவி வெப்ப மடைதலை குறைப்பது பற்றி நடைபெற்ற இக்கூட்டத்தில் 190 நாடுகள் கலந்துகொண்டன.

சீனா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் படிம பொருட்களை எரித்து உருவாக்கப்படும் எரிசக்தியை குறைப்பதன் மூலமாக சூழலுக்கு கேடு விளைவிக்கும் மாசுகளைத் தவிர்த்து சூழலியல் மாற்றத்திற்கு உதவுவதாக கூறியுள்ளது. இதன் மூலம் வருகிற 12 ஆம் திகதி வரை பெருவின் தலைநகரான லிமாவில் நடக்கும் இந்தக் கூட்டம் 2015 இன் காலநிலை மாற்றத்துக்கான தீர்வை நோக்கி நம்பிக்கையுடன் ஆரம்பித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கிறிஸ்டியானா, படிம வளங்களில் செய்யப்படும் முதலீட்டின் அபாயம் நாளுக்கு நாள் அதிகரிப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். ஐந்து வருடங்களில் இல்லாத அளவுக்கு எண்ணெய் விலைகள் தற்போது குறைந்துள்ளது, மேலும் எண்ணெய் விலைகளில் அடிக்கடி உண்டாகும் ஏற்ற இறக்கமும், நாம் காற்றாலை, சோலார் பேனல்கள் போன்ற இயற்கை எரிபொருள்களைப் பயன்படுத்த தொடங்குவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்றனர்.

கச்சா எண்ணெய் விலை சரிவு இயற்கை வளங்களின் மீதான முதலீட்டைக் குறைக்கும் வாய்ப்பிருப்பதாகவும், ரஷ்யா, சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஏற்கனவே தங்கள் வருவாயை இழந்து விடும் பயத்தில் இருப்பதாகவும், நீண்ட நாட்களுக்குப் பிறகு சூழலியலில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமிருப்பதாகவும் சூழலியல் வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக உணவுத் திட்டம் இடைநிறுத்தம்

## பாதிப்புக்களை எதிர்நோக்கும் சிரிய அகதிகள்

ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்படும் உணவு உதவித் திட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு நிகழச்சி திட்ட அமைப்பு தெரவித்துள்ளது.

1.7 மில்லியன் மக்களுக்கு தொடர்ந்தும் உணவு வழங்குவதற்கு நிதிப் பற்றாக்குறை நிலவு. வதாலேயே இந்த முடிவினை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இடைநிறுத்தப்பட்டுள்ள உணவு உதவித் திட்டத்தின் ஊடாக லெபனான், துருக்கி, ஈராக் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் வசிக்கும் சிரிய நாட்டு அகதிகளே பயன் பெற்று வந்தனர்.

இந்தத் திட்டம் நிறுத்தப் பட்டுள்ளதால் அதிகமான குடும்பங்கள் பசியினால் வாடும் நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கேரளாவில் பரவும் குரங்குக் காய்ச்சல்

கேரளாவில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பறவைக் காய்ச்சல் காரணமாக ஆயிரக் கணக் கான வாத்துகள் செத்து மடிந்தன. இந்த நிலையில் கேரளாவில் உள்ள ஆதிவாசி காலனியில் சிலர் குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உள்ளது தெரிய வந்தது.

இதுகுறித்து கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வி.எஸ்.சிவகுமார் கூறியதாவது,

மலப்புரம் மாவட்டம் நிலம்பூர், கரளாயி மாஞ்சீரி ஆதிவாசி காலனியில் கடந்த 26 அம் திகதி முதல் ஒருவித காய்ச்சல் காரணமாக 31 பேர் பாதிப்படைந்தனர். அவர்கள் அங்குள்ள அரசு மாவட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். 180 பேர் வசித்து வரும் இந்த காலனி நிலம்பூர் வனப்பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 22 கிலோ மீட்டர் நடந்து தான் அங்கு செல்ல முடியும்.

அதைத் தொடர்ந்து சிறப்பு மருத்துவக் குழுவினர் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, காய்ச்சல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரத்த பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்கள் சில தினங்களில் பூரண குணம் அடைந்தனர்.

ஆதிவாசி காலனி அருகே சுருளாயி தோட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் ஒரு குரங்கு இறந்து கிடந்ததாகவும், அதைத் தொடர்ந்து பலருக்கு காய்ச்சல் ஏற்பட்டு இருப்பதும் தெரியவந்தது.

நாகமலையை சேர்ந்த தாடி மாதன் (வயது 65) என்பவரது ரத்தம் பரிசோதனைக்காக மணிப்பால் கஸ்தூரிபாய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப் பட்டது.


அங்கிருந்து வந்த ஆய்வு அறிக்கையின் படி தாடிமாதனுக்கு குரங்கு காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப் பட்டது. அதைத் தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு, இந்த காய்ச்சல் மேலும் பலருக்கு பரவாமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த காய்ச்சல் எந்த வகையில் பாதிப்பு ஏற்படுத்தும். இதனால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாக விரிவான அறிக்கை தயாரித்து தாக்கல் செய்ய வேண்டும் என சுகாதாரத் துறைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. இவ்வாறு மந்திரி சிவகுமார் கூறினார்.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் DDTV நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை 05.00 - | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் | ஆலய தரிசனம் பக்திப் பாடல்கள் |
| 07.00 - | காலைக் கதிர் | காலைக் கதிர் | காலைக் கதிர் | காலைக் கதிர் | காலைக் கதிர் |
| 08.00 - | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் |
| 09.00- | SMS TIME (LIVE) | SMS TIME (LIVE) | SMS TIME (LIVE) | SMS TIME (LIVE) | SMS TIME (LIVE) |
| 09.58 - | காலை செய்தி | காலை செய்தி | காலை செய்தி | காலை செய்தி | காலை செய்தி |
| 10.00 - | HELLO DD | HELLO DD | HELLO DD | HELLO DD | HELLO DD |
| 10.30 - | புதுயுகம் | தெரிந்தால் சொல்லுங்கள் | ஆரோகணம் | மக்கள் முகம் | I T .COM |
| 11.00 - | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க |
| 11.30 - | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க |
| பிற்பகல் 12.00 - | வரலாற்று நாயகர்கள் | அதிர்வுகள் | வரலாற்று நாயகர்கள் | வரலாற்று நாயகர்கள் | வரலாற்று நாயகர்கள் |
| 12.30 - | தமிழ் பேசு தமிழா | அதிர்வுகள் | அதிர்வுகள் | அதிர்வுகள் | ஆரோக்கியமான வாழ்வு |
| 01.20 - | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் |
| 01.30 - | நகைச்சுவை திரைப்படம் | காதல் திரைப்படம் | காவிய திரைப்படம் | அதிரடி திரைப்படம் | சூப்பர் திரைப்படம் |
| 03.58 - | மாலை செய்தி | மாலை செய்தி | மாலை செய்தி | மாலை செய்தி | மாலை . செய்தி |
| 04.00 - | மழலைகள் | மழலைகள் | மழலைகள் | மழலைகள் | மழலைகள் |
| மாலை 05.00 - | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க |
| 06.00 - | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் |
| 07.00 - | அதிர்வுகள் | அதிர்வுகள் | அதிர்வுகள் | அதிர்வுகள் | வரலாற்று நாயகர்கள் |
| 07.30 - | அதிர்வுகள் | அதிர்வுகள் | அதிர்வுகள் | அதிர்வுகள் | தமிழ் பேசு தமிழா |
| 08.00 - | பிரதான செய்தி | பிரதான செய்தி | பிரதான செய்தி | பிரதான செய்தி | பிரதான செய்தி |
| 08.20 - | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் |
| 08.30 - | ஹலோ டி.டி | ஹலோ டி.டி | ஹலோ டி.டி | ஹலோ டி.டி | ஹலோ டி.டி |
| 09.00 - | திரைப்படம் | திரைப்படம் | திரைப்படம் | திரைப்படம் | திரைப்படம் |
| 11.30 - | நீங்காத நினைவுகள் | நீங்காத நினைவுகள் | நீங்காத நினைவுகள் | நீங்காத நினைவுகள் | நீங்காத நினைவுகள் |
| 12.00 | முடிவு | முடிவு | முடிவு. | முடிவு | முடிவு |

| நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|
| காலை | | |
| 05.00 | ஒளிமயமான வாழ்வு | ஒளிமயமான வாழ்வு |
| 07.00 | MORNING SONG | MORNING SONG |
| 08.00 | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் |
| 09.00 | ஆரோகணம் | புதுயுகம் |
| 09.30 | MY STYLO | புதுயுகம் |
| 09.58 | காலை செய்தி | புதுயுகம் |
| 10.00 | ஆரோக்கியமான வாழ்வு | தமிழ் பேசு தமிழா |
| 10.30 | ஆரோக்கியமான வாழ்வு | ஹலோ டி.டி |
| 11. 00 | மக்கள் முகம் | அதிர்வுகள் |
| 11.30 | ஐ.ரி.கொம் | அதிர்வுகள் |
| 12.00 | காதல் கீதங்கள் | ஆரோகணம் |
| 12.30 | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க |
| 01.00 | மதிய செய்தி | திரைப்படம் |
| 01.20 | பாடல்கள் | திரைப்படம் |
| 01.30 | திரைப்படம் | திரைப்படம் |
| 03.58 | மாலை செய்தி | திரைப்படம் |
| 04.00 | சிரிக்க சிரிக்க | சிரிக்க சிரிக்க |
| 05.00 | அதிர்வுகள் | அதிர்வுகள் |
| 06.00 | நாளிதழ் நேரம் | நாளிதழ் நேரம் |
| 07.00 | வரலாற்று நாயகர்கள் | ஐ.ரி.கொம் |
| 07.30 | தெரிந்தல் சொல்லுங்கல் | மக்கள் முகம் |
| 08.00 | பிரதான செய்தி | பிரதான செய்தி |
| 08.20 | பாடல்கள் | |
| 08.30 | இதய ஊஞ்சல் | இதய ஊஞ்சல் |
| 09.00 | ஆங்கில திரைப்படம(தமிழாக்கம்) | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம்) |
| 11.30 | நீங்காத நினைவுகள் | நீங்காத நினைவுகள் |



# நாடு தழுவிய ரீதியில் இன,மத,நல்லுறவு ஏற்பட "ஓம் நமச்சிவாய" சிவ ஆராதனை

## ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ சபா.வாசு தலைமையில்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் 'ஓம் நமச்சிவாய' விஞ்ஞாபன ஆராதனை இன்று காலை 8 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரரேஸ்வரர் (சிவன்) தேவஸ்தானத்தில் ஆரம்பமாகின்றது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தலைவரும், ஓம் நமசிவாய நெறியாளரும் வித்தியாசேகரம் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

ஓம் நமசிவாய நிகழ்வு வரவேற்பை சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்த குருக்கள் வழங்குவார். இலங்கையில் இன, மத நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்காகவும், தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வுகள் கிடைத்து, மக்களின் வாழ்வு உயர்வடையவும் எல்லாம் வல்ல சிவனை ஆராதித்து ஓம் நமசிவாய மந்திரம் இன்று அகில இலங்கையிலும், அதன் ஊடாக உலகெங்கும் ஒலிக்கவேண்டும் எனும் நோக்கில் சித்தன்கேணி தனுவோடை சிவன் தேவஸ்தானத்தில் முழுநாள் சிவ ஆராதனையும், அபிஷேக நிகழ்வும் சிவஸ்ரீ சபா.வாசுதேவகுருக்கள் தலைமையில் இடம்பெறும். காலை 8 மணிக்கு அரிசிமா அபிஷேகமும், பின் 9 மணிக்கு மஞ்சள் மா அபிஷேகமும், 10 மணிக்கு நாதஸ்வர, தவில் சமர்ப்பணமும் இடம்பெறும்.

பின் மாலை 3 மணிக்கு பன்னீர் அபிஷேகமும், 3.30 மணிக்கு தியானமும் இடம்பெறும்.


இன்று சித்தன்கேணி தனுவோடை பகுதியில் இடம்பெறவுள்ள ஓம்நமசிவாய ஆராதனை நிகழ்வில் வடக்கில் இருந்து பெருந்திரளான மக்கள் திரளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி சிவ ஆராதனை நிகழ்வில் குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புமகேஷ்வரக் குருக்கள், பேராசிரியர் பிரம்மஸ்ரீ பா.கோபாலகிருஸ்ண ஐயர், சிவஸ்ரீ.நா. சர்வேஸ்வரகுருக்கள், சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரகுருக்கள், சிவஸ்ரீ கை.வாமதேவகுருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

நிகழ்விற்கு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

# மாகாண சபையின் கையாலாகாத்தனம் வடக்கு மக்களின் துரதிஷ்டம்

## இதை மாற்றி அமைக்க எமக்கு அரசியல் பலத்தை வழங்குங்கள்



(அச்சேழு)

துரதிஷ்டவசமாக கையாலாகாத்தன்மை கொண்ட வடக்கு மாகாண சபையினை வட மாகாண மக்கள் தெரிவு செய்ததனால் அதனை வெற்றிகரமாக செயற்படுத்த முடியாமல் போய்விட்டது என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்துள்ளார்.

அச்செழு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த கலை விழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு சான்றாக இங்குள்ள சிறார்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் என்பவற்றை மனப்பாடம் செய்து மிகவும் திறமையாக கூறியுள்ளனர்.

இவ்வாறா்ன ஆற்றலையும் திறனையும் சிறுவர்கள் பெறுவதற்கு காரணம் ஆசிரியர்களாவர். சமுதாயத்தை உருவாக்குவதில் முன்னோடியானவர்கள் அவர்களே. அவர்களுக்கே நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அதனால் தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட மாகாணத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவாக மாதாந்தம் 3,000 ரூபா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அத்துடன் அவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்.

வீராப்பு பேசி எம்மால் எதையும் சாதிக்க முடியாது. அமைதியாக இருந்துதான் சாதிக்க வேண்டும். அரசினால் பெருந்தொகையான நிதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. இங்கு முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகள் உள்ளடங்கலாக இன்னும் நிறைய அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த முடியும். அவ்வாறு செயற்படுத்துவதற்கான அரசியல் பலத்தை நீங்கள் தான் எமக்கு வழங்க வேண்டும்.

பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி சுதர்சினி கோபிநாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் மோகனராஜ், கிராம சேவையாளர் சண்முகவடிவேல், வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் த.றஜீவன், அச்செழு சமூர்த்தி உத்தியோகத்தர் ஜெய சிங்கம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அச்செழு கிராம ஒருங்கிணைப்பாளர் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மருத்துவ மாணவர்களுக்கு பாக்.புலமைப் பரிசில்

இலங்கை மருத்துவத்துறை மாணவர்கள் ஐவருக்கும் பல் மருத்துவத்துறை மாணவர் ஒருவருக்கும் பாகிஸ்தான் அரசு உயர்கல்விக்கான புலமைப் பரிசிலுக்காக நிதியொதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தானுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஹாசிம் ஹுரேசி தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாணவர்களையும் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தில் சந்தித்து அவர்களது உயர் கல்வியை சிறந்த முறையில் தொடர்வதற்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கையைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கு ஜின்னா புலமைப்பரிசில் திட்டம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய..

கடல்பாதுகாப்பு மாநாட்டை முன்னிட்டு இந்தக்கப்பல்கள் கொழும்புக்கு வந்துள்ளன. இந்த இரண்டு கப்பல்களும் நாசகாரி கப்பல்களாகும். இவையிரண்டும் முறையே 151 மீற்றர் மற்றும் 137 மீற்றர் நீளத்தைக் கொண்டவையாகும்.

இதில், ஹருசேம் 4550 தொன் நிறையை கொண்டது. ஆமாகிரி 3550 தொன் நிறையை கொண்டது. இந்த இரண்டு கப்பல்களிலும் 390 கடற்படையினர் பயணம் செய்கின்றனர்.

## அனர்த்த...

யும் பொருட்டும், இலங்கைக்கு முதற்கட்டமாக 200 மில்லியன் ஜப்பானிய ஜென் பணத்தினை ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது.

இத்தொகை 240 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியாகும். இரு நாடுகளுக்குமிடையில் காணப்படுகின்ற பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தினை முன்னிட்டே இவ்வாறான நிதியொதுக்கீட்டினை ஜப்பானிய அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் உபகரணங்களை கொள்முதல் செய்தல், நாட்டு மக்களின் சுகாதார நிலைமைகளை தரமான முறையில் வைத்திருத்தல், குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணங்கள் என அனைத்துக்கும் இத்தொகை பயன்படுத்தப்படவுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதமும் 200 மில்லியன் பணத்தொகை ஜப்பான் அரசினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நோபுகிற்றோ ஹோபோ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர்.பி.பி. ஜயசுந்தர, ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துக்களை பரிமாறியமை குறிப்பிடத்தக்கது.

## உறவுகளை...

ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அஜித் டோவல் நேற்றுக்காலை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன்போது அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் தரம் குறித்து திருப்தி வெளியிட்டார் என்றும், இரு தரப்பு உறவுகளை மேலும் எவ்வாறு பலப்படுத்துவது என்பது குறித்து இருவரும் ஆராய்ந்தனர் எனவும் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## நல்லை...

தளபதியை வரவேற்ற குரு முதல்வர் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## புலிகள் மீது...

விருக்கிறது. இத்தகவலை ஐரோப்பிய ஒன்றியத்துக்காகப் பேசவல்ல அதிகாரி மாயா கோட்சியாண்சிச் பி.பி.சி.யிடம் கூறினார்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தது.

இந்தத் தடை உத்தரவை அடுத்து விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் என்று அறிவிக்கப்பட்டு, அதன் சொத்துக்கள் முடக்கப்பட்டன.

இந்த முடிவை எடுக்கும்போது, முறையான வழிமுறைகளை ஐரோப்பாவின் அரசியல் தலைவர்கள் பின்பற்றவில்லை என்று கூறி ஒக்ரோபர் மாதத்தில் ஐரோப்பிய நீதிமன்றம் அளித்த தீர்ப்பு கூறியது.

ஆனால் இந்த முடிவை அடுத்து வழிமுறைகளுக்கு அமைய மீண்டும் இந்தத் தடையை அமுல்படுத்த ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நீதிபதிகள் மூன்று மாத காலம் அவகாசம் அளித்தார்கள். ஆனால் இந்த தீர்ப்புக்கு எதிராகவே இப்போது மேன் முறையீடு செய்ய விருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி கூறியிருக்கிறார்.

இந்த மேன் முறையீடு குறித்து நீதிமன்றம் முடிவு செய்யும் வரை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது எற்கனவே விதிக்கப்பட்ட தடை அமுலில் இருக்கும் என்று நீதிமன்றத்துக்காகப் பேசவல்ல ஒரு அதிகாரி கூறினார்.

## புலிகள் செய்த...

றார். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையொன்றின் போது நான்கு சாட்சிகள் தெரிவித்த தகவல்களின் பின்னணியில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் எம்.ஐ. வஹாப்தீனின் உத்தரவுக்கமைவாக இந்த அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றிருக்கின்றது.

பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரின் பொறுப்பில் இடம்பெற்ற இந்த அகழ்வின்போது அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகள், சட்ட வைத்திய பிரிவினர் மற்றும் கொழும்பு ஜயவர்தனபுர, ரஜரட்ட ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தோர் உள்ளிட்ட பலர் வந்திருந்தனர்.

இலங்கை பொலிஸ் பரிசோதகர் ஜெயரத்னம், இராணுவ கப்டன் ஒருவர் உள்ளிட்டோரும் இவ்வாறு விடுதலைப்புலிகளினால் சிறை வைக்கப்பட்டிருந்து பின்னர் கொல்லப்பட்டதாகக் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண கூறினார்.

இந்த அகழ்வு பணிகளின்போது கொல்லப்பட்டவர்களின் உடல் எச்சங்கள் போன்ற தடயப் பொருட்கள் கிடைக்கவில்லை. ஆயினும் கொல்லப்பட்டவர்கள் எரியூட்டப்பட்டதற்கான அடையாளங்களைக் கொண்ட தடயங்களையே இராசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் சேகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அதிக குடும்பங்களுக்கு...

யுத்தத்தின் அழிவுகளாலும், பாதிப்புக்களாலும் அழிவடைந்திருந்த கிளிநொச்சி மாவட்டம் தற்போது பல்வேறு அபிவிருத்திகளை கண்டுள்ளதுடன், மக்களின் வாழ்வும் மேம்பாடடைந்துள்ளது என்பதுடன் எதிர்காலத்தில் மேலும் அபிவிருத்திகளில் முன்னேற்றம் காணவேண்டும்.

இதற்கு சரியான எமது அரசியல் நிலைப்பாடு தான் காரணமென அமைச்சர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரத்தில் இருப்பவரையா? அல்லது அதிகாரத்திற்கு வரமுடியாதவரையா? தெரிவு செய்யப் போகின்றோம் என்பதை மக்கள் சரியாக தீர்மானிக்க வேண்டும்.

இதனிடையே மக்களை குழப்பும் வகையில் பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில் மக்களுக்கு உண்மையான செய்திகளை தெளிவடைய வைக்க வேண்டிய முக்கிய பொறுப்பை உணர்ந்து நீங்கள் பணியாற்ற வேண்டும்.

அந்தவகையில் தான் மக்களினதும் சமுதாயத்தினதும் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு துஷ்பிரயோகங்களுக்கு இடமளிக்காது அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இம்மாவட்டத்தில் வாழும் விசேட தேவையுடையோருக்கு 'உறுதுணை' என்ற திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டிலான செயற்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறும் அமைச்சர் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இங்கு உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும், மழை வெள்ளத்தால் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டதுடன், கோரிக்கைகளுக்கு முன்னுரிமையடிப்படையில் தீர்வுகள் பெற்றுத் தரப்படுமென்றும் தெரிவித்தார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறினிவாசன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# குழியில் விழுந்த சிறுவன் பரிதாபகரமாக உயிரிழப்பு

## தீவுகத்தில் சோகம்

(யாழ்ப்பாணம்)

மழை நீர் நிரம்பிய நிலையில் மலசல கூடத்திற்கென வெட்டப்பட்ட குழியில் தவறிவிழுந்த சிறுவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் இப்பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சசிகரன் சானுஜன் (வயது - 2) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தனது அண்ணனுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் வீட்டின் பின்புறமாக மலசல கூடத்திற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் நீர் நிரம்பியிருந்த வேளையில் அருகாக சென்றுள்ளார்.

இதன்போது சிறுவன் தவறி வீழ்ந்த குழியில் வீழ்ந்துள்ளதாகவும் சிறுவனைக் காணாது தேடிய நிலையில் குழியில் தேங்கி நின்ற மழை நீர் கலங்கி யிருந்ததையடுத்து அதனுள் தேடிய நிலையில் சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனாவில் ஒப்படைக்கப்பட்ட சிறுவனின் சடலம் நேற்று மாலை மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, தீவகங்களில் இவ்வாறு குழிகள், கிணறுகளில் சிறுவர்கள் உயிரிழப்பது கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளார். (இ.25,21)

# கடைக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

(நெல்லியடி)

காலையில் நெல்லியடியில் உள்ள கடைக்குச் சென்றவர் மாலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நெல்லியடி சந்தைக்கு அருகாமையில் உள்ள கடையில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது கரணவாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையாக எஸ். தியாகு (வயது- 65) என்பவரே கடையினுள் இறந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, காலையில் எழுந்து கடைக்குச் சென்றவரைப் பார்ப்பதற்காக மாலை 3.00 மணியவில் உறவினர் சென்றபோது அங்கு கடை உரிமையாளரான தியாகு மரணமாயிருப்பதனை அவதானித்தார்.

இதனைத் தொடர்ந்து நெல்லியடி பொலிஸாரின் உதவியுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் நேற்று மாலை சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்வதற்கு நிரந்தர வைத்தியர் இல்லாமையினால் வடமராட்சியில் இறப்பவர்களது பிரேதங்கள் காலதாமதமாகிய நிலையிலேயே வழங்கப்படும் அவல நிலைமை யேற்படுவதாக வைத்தியசாலை உயரதிகாரி கவலையுடன் தெரிவித்தார். (18)

## இரகசிய உடன்பாடு எவருடனும் இல்லை

ஜாதிக ஹெல உறுமயவுக்கும் தனக்குமிடையில் எந்தவித இரகசிய உடன்படிக்கைகளும் இல்லையென பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஜனாதிபதித் தேர்தல் குறித்த தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டால், சகல பாதுகாப்புத் தரப்பினருடைய கௌரவத்தையும் பாதுகாப்பேன்.

அவர்களுக்குரிய இடத்தை வழங்குவேன். பாதுகாப்புப் படையினர் அணிந்துள்ள சீருடையின் கண்ணியத்தைப் பாதுகாப்பேன் எனத் தெரிவித்தார்.

# மானிய விலையில் மோட்டார் சைக்கிள்; கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை

## ஆளுநருக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும் என கோரி வடக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியை கடிதம் மூலம் கோரி வருகின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் ஐ.ம.சு கூட்டமைப்பு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள்களை இலவசமாக வழங்கியிருந்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர்களும் மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து ஒவ்வொரு உள்ளூராட்சி சபை கூட்டமைப்பு உறுப்பினர்களும் தனித் தனியே தமது பிராத்தியேக கடிதத் தலைப்புக்களில் ஆங்கிலத்தில் மாகாண ஆளுநருக்கு கடிதங்களை அனுப்பி வருகின் றனர்.

கடிதங்களில் தாம் 50 ஆயிரம் ரூபா நிதி செலுத்த தயாராக இருப்பதாகவும் அரசிற்கும் பொது மக்களுக்கும் தாம் விசுவாசமாக கடமையாற்ற எதிர்காலத்தில் உள்ளதாகவும் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி கடிதங்களுக்கு விரைவில் வடக்கு ஆளுநர் சாதகமான பதில் வழங்கி மோட்டார் சைக்கிள் வழங்குவார் என்ற நம்பிக்கையிலேயே தாம் கடிதங்களை சமர்ப்பிப்பதாக வலி-கிழக்கு மானிப்பாய் பிரதேச சபை கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று கருத்துத் தெரிவித்தனர்.

# தென்மராட்சியில் வெள்ள அனர்த்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

(நாவற்குழி)

தென்மராட்சி நாவற்குழி மற்றும் மறவன்புலோ பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்றைய தினம் மேற்படி பகுதிகளுக்கு ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது நாவற்குழிப் பகுதியில் வெள்ளநீரை அகற்றுவதற்கான வசதிகளை மேற்கொண்டதுடன், உலருணவுப் பொருட்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.



இதேவேளை மறவன்புலோ பகுதிகளில் வெள்ளத்தினால் மூடிய வீதிகளைப் பார்வையிட்டு அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடியதுடன் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

# 100 குடும்பங்கள் பாதிப்பு உதவ எவரும் முன்வரவில்லை

## பொம்மைவெளியில் மக்கள் நிர்க்கதி

(யாழ்ப்பாணம்)

யாழ். இராச வீதியிலுள்ள பொம்மை வெளிப்பகுதியில் 1ஆம் குறுக்குத் தெருவிலிருந்து 9ஆம் குறுக்குத்தெரு வரையான பகுதியிலுள்ள 100 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்யும் கன மழையினால் பரவலாக வீதிகளிலும் பல இடங்களிலும் குடிமனைக்குள்ளும் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலை அவதானிக்கப்படுகிறது.

1ஆம் குறுக்குத் தெருப்பகுதியிலுள்ள குடியிருப்புக் களுக்குள்ளும் வெள்ள நீர் தேங்கி காணப்படுவதாகவும் இப்பகுதியில் உள்ள மக்கள் இதனால் பல்வேறு அசௌகரிங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (105)



யாழ். பிரதான பேருந்து தரிப்பிடப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள கழிவுகள் கவனிப்பாரற்று காணப்படுகின்றது.

படப்பிடிப்பு : எஸ்.வி. பிரசாத்

# சுகாதார திட்டத்தின் கீழ் நாளை முக்கிய கருத்தமர்வு

ஆரோக்கியமான இலங்கை தேசிய சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது. நாளை காலை 10.00 மணிக்கு யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இக்கருத்தரங்கு இடம்பெறும். இதில் வைத்திய நிபுணர் ரி. பேரானந்தராஜாவினால் சிறுநீராக நோய் உட்பட தொற்றா நோய்களைத் தடுப்பதற்கான வாழ்க்கை முறையினை மேம்படுத்தல் எனும் தொனிப் பொருளிலான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (இ)

# சட்ட விரோத கள்ளு விற்பனை 14 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த மாதத்தில் சட்ட விரோதமான முறையில் மதுவை கையாண்ட இருவர் மீது சட்ட நவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக யாழ். மதுவரித் திணைக்கள அதிகாரி செந்தூர் செல்வன் தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் கள்ளு கொண்டு சென்றார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 14ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 3ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.